விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 12 வியாழக்கிழமை (24.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 067

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

### வடக்கில் பொதுமக்களின் வீடுகளில் இராணுவம்

## தமிழ்க் கூட்டமைப்பு- அரசாங்கம் நாடாளுமன்றில் நேற்று காரசாரம்

(கொழும்பு)

**வடபகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள வீடுகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் அரசாங்கத்தின் பிரதம கொறாடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் நேற்று காரசாரமான விவாதம் நடைபெற்றது.**

வடக்கில் இதுவரை அகற்றப்படாத அதியுயர் பாதுகாப்பு வலயம் மற்றும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள தனியார் வீடுகள், அலுவலகங்கள் என்பன தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நேற்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

அவ்வாறான அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக அகற்றப்பட்டு வருவதாக குறிப்பிட்ட அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, வடக்கு எனும்போது பரந்துபட்ட பெரியதொரு பிரதேசத்தைக் குறிப்பிடுவதாகவும் அதற்குப் பதிலாக எந்த மாவட்டங்களில் இராணுவத்தினர் தனியார் சொத்துக்களைப் பயன்படுத்துகின்றனர் என்பதை விபரமாகத் தெரிவிக்குமாறு பதிலுக்கு கேள்வியெழுப்பினார்.

அத்துடன் வான் படையினருக்கு 23 காணிகளையும், (20ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ மூனுடன் சந்திப்பு இடம்பெறவில்லை- அரசு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க மற்றும் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோர் நியூயோர்க்கில் வைத்து ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ மூனை சந்தித்ததாக வெளியாகிய செய்திகளை அரசாங்கம் நேற்று நிராகரித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ளதாகவும் தனக்கு தெரிந்த வகையில் சட்டமா அதிபருக்கும் ஐக்கிய நாடுகள் செயலாளருக்குமிடையில் எந்தவித சந்திப்பும் ஏற்பாடு செய்யப்படவில்லை எனவும் பிரதியமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவோடு ஐக்கிய நாடுகள் செயலாளரின் நிபுணர்குழு தொடர்பு கொள்வதை அரசாங்கம் தடுத்ததாக வெளியான செய்திகளையும் அவர் மறுத்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அலுவலகத்தோடு தொடர்பு கொள்ள நாங்கள் முயற்சிக்கின்றோம். நல்லிணக்க ஆணைக்குழுவோடு (20ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதப் பட்டியலில் மீண்டும் விடுதலைப் புலிகள்

### ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு


(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் தனது பயங்கரவாதப் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் சேர்த்துள்ளது. பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் பரந்தளவில் மீளாய்வு செய்யப்பட்டதையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயர் இப்பட்டியலில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நபர்களுக்கும் அமைப்புக்களுக்கும் எதிராக பயங்கரவாதத்தை எதிர்த்து போராடும் நோக்குடன் ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளில் செயற்படுவதைத் தடை செய்தல், சொத்துக்களை முடக்குதல் போன்றவற்றை இலக்காகக் கொண்டு 2001 ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதிய 2580/2001 ஆம் (20ஆம் பக்கம் பார்க்க)

### அஸ்தி மீது நாய்களின் சடலம்

## காட்டுமிராண்டித்தனம் என கூட்டமைப்பு குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

பார்வதி அம்மாளின் அஸ்தி மீது 03 நாய்களைச் சுட்டுப்போட்ட நடவடிக்கையானது காட்டுமிராண்டிச் செயலாகுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளதாவது, (20ஆம் பக்கம் பார்க்க)

## பார்வதி அம்மாளின் அஸ்தியின் மீது சூட்டுக்காயத்துடன் 3 நாய்களின் சடலம்

### மனிதாபிமானம் அற்ற செயல் என குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் அஸ்தியின் மீது சூட்டுக் காயங்களுடன் மூன்று நாய்களின் சடலங்கள் வீசப்பட்டதுடன் அவரின் அஸ்தியும் சிதைக்கப்பட்டிருந்ததாக அவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

பார்வதி அம்மாளிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வுகளைத் தொடர்ந்து அவரின் பூதவுடல் ஊறணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நெருங்கிய உறவினரான சங்கர் நாராயணன் சிதைக்கு தீ மூட்ட அக்கினியுடன் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா நாடாளுமன்றக் குழு அரச அதிபருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற அரசியல் குழுவினருக்கும் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வரும் உதவிகள் பொதுமக்களைச் சென்றடைகிறதா என ஆராய்வதற்கு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற (20ஆம் பக்கம் பார்க்க)

## உழவு இயந்திரங்கள் தென்பகுதிக்கு மாற்றம்

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட மாகாண விவசாயிகளுக்காக இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 500 உழவு இயந்திரங்களில் 200 உழவு இயந்திரங்கள் 2 அரச நிறுவனங்களுக்கு கை மாற்றப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தது.

இதில் 100 உழவு இயந்திரங்கள் தெங்கு அபிவிருத்தி சபைக்கும் மற்றைய 100 உழவு இயந் (20ஆம் பக்கம் பார்க்க)

### மீனவர்களின் பிரச்சினைத் தீர்வுக்கு

## இந்திய, இலங்கை கூட்டுச் செயற்குழு அடுத்த மாதம் சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

இந்திய, இலங்கை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இரு நாடுகளினதும் கூட்டு செயற்குழுவொன்று அடுத்த மாதம் சந்தித்துப் பேசவுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

மீனவர் தொடர்பான கூட்டு செயற்குழு இவ்வருடம் மார்ச் மாதம் சந்தித்துப் பேசுவதற்கு இரு நாடுகளும் இணங்கியுள்ளன. அத்துடன் மீனவர் சங்கங்களையும் தமக்கிடையில் தொடர்புகளைப் பேணுமாறு நாம் ஊக்குவிக்கிறோம். அத்தகைய தொடர்புகள் பரஸ்பரம் நன்மையளிப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் (20ஆம் பக்கம் பார்க்க)

**Study & Work in UK and Canada**
Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# கரப்பந்தாட்ட போட்டி


(நெல்லியடி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்ட போட்டிகள் இன்றும் நாளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டிகள் இன்று காலை 8.00 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளதுடன், பெண்களுக்கான போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**
பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)






கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற, பதவியுயர்வு பெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வில் தமிழ் இம்மியம் வாத்திய நிகழ்வுடன் விழா நாயகர்கள்,வலயக் கல்விப் பணிப்பாளரினால் அழைத்து வருவதையும், ஓய்வு பெற்ற பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கணபதிப் பிள்ளைக்கு,தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மதுரநாயகம் நினைவுப் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் நடப்பது காட்டாட்சியா?

# திருமாவளவனுக்கு மீண்டும் அனுமதி தேவை!

## திராவிடர் கழகத் தலைவர் வீரமணி காட்டம்



(சென்னை)

**பிரபாகரன் தாயார் இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவனைத் தடுப்பதா?துக்கம் விசாரிக்க அவருக்கு மீண்டும் அனுமதி பெற்றுத் தரவேண்டும்! இலங்கையில் நடப்பது காட்டாட்சியா? என மத்திய அரசுக்குத் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அவர்களின் அருமைத் தாயார் திருமதி பார்வதி அம்மாள் யாழ்ப்பாணத்தில் காலமானதையொட்டி மனித நேயத்துடன் அவர்களுக்கு இறுதி மரியாதை செலுத்த விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் தோழர் திருமாவளவன் இலங்கைக்கு புறப்பட்டுச் சென்று விமான நிலையத்தில் இறங்கியபோது அவருக்கு இலங்கை அரசு உள்ளே செல்ல அனுமதி மறுத்து, அவரை வந்த விமானத்திலேயே திரும்பிச் செல்லுமாறு பிடிவாதம் காட்டி,சிங்கள அரசின் அதிகாரிகள் அவரை சென்னை திரும்பும்படி செய்துவிட்ட கொடுமையைக் கேட்டு உணர்ச்சியும், மனித நேயமும் உள்ள நமது நெஞ்சங்கள் குமுறுகின்றன.

தோழர் தொல்.திருமாவளவன் அவர்கள் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் தலைவர் மட்டுமல்ல; இந்திய நாடாளுமன்றத்தின் உறுப்பினரும் கூட.

ஏற்கெனவே இந்திய அரசு அனுப்பிய தூதுக் குழுவில் சென்று ஜனாதிபதி மகிந்தவுடன் நேரில் விவாதித்துத் திரும்பிய குழுவினரில் ஒருவர்.அவரை ஒரு இறுதிச்சடங்கில்கலந்துகொள்ளக் கூடாது என்று திருப்பி அனுப்புவது பச்சை பாசிசப் போக்கு அல்லவா? காரணத்தை கூறுங்கள் என்று பல முறை அவர் வற்புறுத்தி அதிகாரிகளிடம் வாதாடியும் பலனில்லை. அவர் அரசியல் நிகழ்வுக்குப் போகவில்லை.துக்க நிகழ்ச்சி-மரண வீட்டுக்குச் செல்வதுகூட கூடாது என்றால் அங்கு காட்டாட்சியா நடக்கிறது?

**மத்திய அரசு பரிகாரம் தேட வேண்டும்**

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி வேறுபாடு இன்றி இலங்கை அரசின் போக்குக் கண்டனம் தெரிவிக்க முன்வர வேண்டும்.

தனிப்பட்ட தொல்.திருமாவளவனுக்கு ஏற்பட்ட அவமானமோ,பின்னடைவோ அல்ல இது.

இந்திய பேரரசுக்கு ஏற்பட்ட அவமானம் என்ற நிலைப்பாட்டுடன் கொதிப்புடன் மத்திய அரசின் வெளியுறவுத்துறை இதனை எண்ணிப் பரிகாரம் தேட வேண்டும்.

**மீண்டும் அனுமதி தேவை**

ஏற்கெனவே பிரபாகரனின் தந்தையார் வேலுப்பிள்ளை அவர்கள் மறைந்தபோது செல்ல அனுமதித்துவிட்டு இப்போது மட்டு மறுப்பதேன்?தமிழக மீனவர்களை இலங்கை அரசு காக்கை குருவிகளைப் போல சுட்டுக் கொல்வது,சிறைப்பிடிப்பது மத்திய அரசு தலையிடுவது பிறகு விடுதலை எனும் நாடகம் நடத்துவது-ஒரு வாடிக்கையான வேடிக்கை கூத்தாகி விட்டது!

மத்திய அரசு இது குறித்து இலங்கைத் தூதரிடம் பேசித் தனது கண்டனத்தைத் தெரிவிப்பதும் மீண்டும் அவருக்கு அனுமதி வழங்கி துக்கம் விசாரிக்க உதவுவதும் அதன் முக்கியக் கடமையாகக் கருத வேண்டும் என்று வற்புறுத்துகிறோம் என்றுள்ளது. (ச-5)

# கே.பியின் நெர்டோ அமைப்பு ஜூலையில் பதிவு செய்யப்பட்டது

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை செயலாளராகக் கொண்ட வடக்கு கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி அமைப்பு (NERDO) கடந்த வருடம் ஜூலை 9ஆம் திகதி பதிவு செய்யப்பட்டதாக அரசாங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் துனேஷ் கன்கந்த எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் அரசாங்கத் தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இதைத் தெரிவித்தார்.

அவ்வமைப்பின் தலைவராக தவரட்ணம் சின்னையா என்பவர் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

வலன்றின், யூ.எல்.ஜயவாலன், வி.யூ. ஜயவதனன்,நந்தகுமார் புனல்ராஜா,சண்முகபாலன், திலீபன் மற்றும் கந்தஸ்வாமி, செந்தில்குமார் ஆகியோர் அவ்வமைப்பின் ஏனைய உத்தியோகஸ்தர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். (ச-5)

**காணி விற்பனைக்கு**
திருநெல்வேலி சந்திக்கும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கும் இடையில் வடக்கு பக்கமாக 400யார் தூரத்தில் 3பக்கங்கள் சுற்று மதில்களுடனும் 15அடி அகல பாதையுடனும் கூடிய 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 8421093
(3871)

# விளையாட்டுப் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாசார் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப. 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி தயாநிதி கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகேஸ்,சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட செயலக உதவி திட்ட பணிப்பாளர் அ.கேதீஸ்வரன்,பளை கோட்டக்கல்வி அதிகாரி சு.ஆனந்தசிவம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர் எஸ்.சிவப்பிரகாசர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ச)

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதி கெங்கரதேவி ஜெயராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதான கணக்காளருமான ப.ஜெயராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி கோட்டக் கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கம், கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் பி.விஸ்ணு, வவுனியா என்றிக் திட்ட பொறியியலாளரும் கல்லூரியின் பழைய மாணவருமான ரி.சிவரஞ்சன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ச)

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 – ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## வன்முறை அச்சுறுத்தல் கொண்ட உலகக் கிண்ணப் பாடலுக்கு தடை

### ஜனாதிபதி உத்தரவு



அவுஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கு எதிராக வன்முறை அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்த கிரிக்கெட் உலக கிண்ண பாடல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் உத்தரவுக்கிணங்க தடை செய் யப்பட்டுள்ளது.

நடப்புச் சம்பியனான அவுஸ் திரேலிய பறவைத்தீனி போன்று நொறுக்கப்படும் நியூசிலாந்து அணி யின் தாடைகள் உடைக்கப்படும் என இப்பாடலில் எச்சரிக்கப்பட்டிருந்தது.

சிங்கள, தமிழ் வரிகள் கொண்ட இப்பாடலை செவிமடுத்த ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ இப்பாடலை ஒலிபரப்ப வேண்டாம் என அரசாங்க வானொலி தொலைக்காட்சிகளுக் கும் உத்தரவிட்டுள்ளார்.

அவமதிக்கும் விதமான வரி களை அனுமதித்தமைக்காக விளை யாட்டுத்துறை அதிகாரிகளையும் ஜனாதிபதி கடிந்து கொண்டுள்ளார்.

இப்பாடல் மோசமான ரசணை கொண்டதென ஜனாதிபதி கருதுகிறார்.

ஏனைய நாடுகளை அவமதிக் காமல் அணியையும் ரசிகர்களை யும் உச்சாகப்படுத்தும் பாடலை அவர் விரும்புகிறார் என ஜனாதி பதிக்கு நெருக்கமான அதிகாரியொரு வர் ஏ.எப்.பி.செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

## மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் தென்னாபிரிக்கா இன்று பலப்பரீட்சை

(டில்லி)

உலகக் கிண்ணத் தொடரில் இன்று டில்லியில் நடைபெறும் 7ஆவது லீக் போட்டியில் தென்னா பிரிக்க – மேற்கிந்தியத்தீவுகள் அணி கள் மோதுகின்றன.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங் கை, பங்களாதேஷ் ஆகிய நாடுக ளில் நடைபெற்று வருகின்றது.

இதில் டில்லியில் இன்று நடை பெறும் 7ஆவது லீக் போட்டியில் 'பி' பிரிவைச் சேர்ந்த பலம் வாய்ந்த தென்னாபிரிக்க – மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதுகின்றன.


எந்த அணி வெற்றி பெறும் என்று சொல்ல முடியாத அளவிற்கு இரு அணிகளுமே சக்திமிக்க அணிக ளாகத் திகழ்கின்றன.

சமீபகாலமாக தென்னாபிரிக்க அணி சிறப்பாக விளையாடி வருகின்றது. எனவே அந்த அணி இப்போட்டியிலும் பிரகாசிக்கலாம். ஆனால் மேற்கிந்தியத் தீவுகள் அணியையும் குறைத்து மதிப்பிட் டுவிட முடியாது.

திடீரென ஆவேசமாகத் தாக்கி எந்த அணியையும் திணறடித்து விடும் ஆற்றல் மேற்கிந்தியத் தீவு கள் அணிக்கு உண்டு.

முக்கிய வீரர்கள் தென்னாபிரிக்க அணியின் அம்லா, சிமித், கலிஸ், டிவில்லியர்ஸ் என பலம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசையுள்ளது.

அதேபோல் எந்த வீரரையும் வீழ்த்தும் திறன்கொண்ட ஸ்ரை யன், மோர்கல் போன்ற பந்துவீச்சா ளர்களும் உள்ளமை தென்னாபிரிக்க அணிக்குப் பலம்.



மேற்கிந்தியத் தீவுகள் அணியில் ஹயில், சந்தர்போல், சர்வான், டெரன்சமி, பிரவோ சகோதரர்கள் போன்ற முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். ஆனால், சமீப காலமாக அவர்கள் எப்போதாவது தான் ஜொலிக்கிறார்கள்.

உலகக் கிண்ணப் போட்டியில் மேற் கிந்தியத் தீவுகள் அணி எழுச்சி பெற்று விளையாடினால் அது தென்னாபி ரிக்க அணிக்கு ஆபத்தாக அமை யும்.

இரு அணிகளுமே பலமான அணிகள் என்பதால் இப்போட்டி யில் கிடைக்கும் வெற்றி இரு அணிக ளுக்குமே முக்கியமானதாக இருக்கும்.

## ஆஸி. அணியில் மீண்டும் ஹசி?



உலகக் கிண்ண கிரிக்கெட் அணியில் தேர்வு செய்யப்பட்டிருந்த அவுஸ்திரேலியா வின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் மைக்கெல் ஹசி காயம் காரணமாக நீக்கப்பட்டார். அவ ருக்குப் பதிலாக பெர்குசன் சன் தேர்வு செய்யப் பட்டிருந்தார். இதனால் மைக்கல் ஹசி சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப் போவ தாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாயின.

இதை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணித் தேர்வுக் குழுத் தலைவர் செப்பல் மறுத்திருக்கிறார்.

ஹசி உள்ளூர் போட்டிகளில் விளையாடி வருகிறார். அவரை உலகக் கிண்ண அணியில் சேர்க்க எனக்கு விருப்பம் தான். ஐ.சி.சி. விதிப்படி யாராவது ஒரு வீரர் காயமடைந்தால் மட்டுமே இனி ஹசியை சேர்க்க முடியுமென செப்பல் தெரிவித்தார். இதுகுறித்து அணித் தலைவர் பொன் டிங் கூறியுள்ளதாவது, மைக்கெல் ஹசி உலகக் கிண்ண தொடரின் பிற்பகுதியில் அணியில் சேர்ந்தால் எங்களுக்கு சந்தோசம் தான் என்றார்.

## இசைக்கருவிகளுக்கு அனுமதி

கிரிக்கெட் போட்டிகளின் போது இசைக்கருவிகளை கொண்டுவர இலங்கைக் கிரிக்கெட் சபை அனு மதி வழங்கியுள்ளது.

இலங்கையில் நடக்கும் உல கக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் போது பாதுகாப்புக் காரணங்களுக் காக இசைக் கருவிகள் உள்ளிட்ட பல பொருட்களை மைதானத்திற் குள் கொண்டுவர பொலிஸார் தடை விதித்தனர். இதற்கு ரசிகர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் ரசிகர்கள் வருகை யை அதிகரிக்கும் வகையில் இசைக் கருவிகளை கொண்டுவர விளையாட் டுத்துறை அமைச்சு அனுமதி வழங் கியுள்ளது. மற்றபடி மதுபானங்கள், கூர்மையான பொருட்கள், வர்த்தக ரீதியிலான கமரா, கண்ணாடி பொருட் களுக்கான தடை தொடரும்.

### இன்றைய கேள்வி

**இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றிபெறும் அணி எது?**

..............................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 26.02.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு நவகலா வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

பெயர்:- ..............................

முகவரி:- ..............................

தொ.பே:- ..............................

தே.அ.அ.இல:- ..............................

அனுப்ப வேண்டிய முகவரி: 'உலகக் கிண்ணம்' வலம்புரி இல.3,2 -ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

### காலிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்?

Cricket

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 10.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு **ஒலிம்பியா ஸ்போட்ஸ்** வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................
7. ..............................
8. ..............................



அனுப்ப வேண்டிய முகவரி

'உலகக் கிண்ணம்' வலம்புரி இல.3,2 -ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

தொ.பே: ..............................

தே.அ.அ.இல: ..............................



ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06, ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## உலகக்கிண்ண கிரிக்கெட்–2011

சம்பியனாகும் நாடு?..............................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்..............................

முகவரி..............................

தொலைபேசி..............................

தே.அ.அ.இல..............................

'உலகக்கிண்ணம்' வலம்புரி இல.3, 2-ம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.



ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்



PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna.
T.P.021 2221101, 021 2229644
email:- pcsjaffna@sltnet.lk





நவாலி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் அணி நடை நிகழ்வையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். கந்தசாமி உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ. இராஜேந்திரன் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- நவாலி செய்தியாளர்)

## போக்குவரத்து விதிமுறைகளை மீறும் ஓட்டுநர்கள் மீது சட்ட நடவடிக்கை

வடமராட்சியில் சிறிய ரக மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான சட்ட விதிமுறைகளை மீறும் ஓட்டுநர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வீதிப்போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் சி.சி.49, சவாரி மோட்டார் சைக்கிளுக்கான சட்ட நடைமுறை கொண்டு வந்த பின் அதிகளவான மேற்படி மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் சட்டங்களை கடைப்பிடிப்பதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் பொலிஸார் அதிகளவான சிறிய ரக மோட்டார் சைக்கிள்களை பரிசோதித்தனர்.

இவற்றின் சாரதி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம், இறைவரிப் பத்திரம், தலைக்கவசம் என்பவற்றை வைத்திருக்காத சாரதிகளை எச்சரித்து விடுவித்தனர். எனவே எதிர்வரும் நாட்களில் மேற்படி சிறிய ரக மோட்டார் சைக்கிளின் விதிகளை மீறும் ஓட்டுநர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஸ்ரீ-3-24)

## சொண்ட் நிறுவனத்தின் மாதாந்த ஆய்வரங்கு

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு நிறுவனத்தின் (சொண்ட்) மாதாந்த ஆய்வரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு இலக்கம் 60, அரசடி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சொண்ட் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இம் மாதாந்த ஆய்வரங்கானது யாழ். குடாநாட்டில் கற்றோர் சமூகத்தில் சிந்தனையை தூண்டவும் அபிவிருத்தியில் அவர்கள் பங்களிப்பைப் பெறும் பொருட்டும் யாழ். மாவட்டம் தழுவிய பொதுப் பிரச்சினைகளைக் கருப் பொருளாகக் கொண்டு நடாத்தப்படுகிறது.

மேற்படி ஆய்வரங்கில் ''வேலையற்றோருக்கு உதவுவதில் தொழில் திணைக்களம், தொழில் இல்லம் என்பவற்றின் பங்கு'' எனும் கருப் பொருளில் உதவித் தொழில் ஆணையாளர் ரி.கனகேஸ்வரன் ஆய்வுரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் பங்குபற்றுநரின் கலந்துரையாடலுக்கு ஒருமணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பங்குபற்றித் தங்கள் கருத்துக்களையும் முன்வைக்குமாறு நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## மாணவர்களுக்கு காலையுணவுடன் சேர்த்து மீன் வழங்க தீர்மானம்

பாடசாலை மாணவர்களுக்கான காலை உணவு வழங்கும் திட்டத்தில் முதலாந்தவணை காலை உணவு வழங்கும்போது அதனுடன் சேர்த்து மீன் வழங்க பொருளாதார அபிவிருத்தியமைச்சினால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ். மாவட்டத்திலுள்ள சகல வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் சென்றமுறை மீன் வழங்கிய பாட சாலைகளுக்கு மட்டும் மீன்ரின் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 8.5 கிராம் அளவுடைய மீன்வழங்க பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்துமாறு சகல வலயக்கல்விப் பணிப்பாளருக்கும் யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## தேசிய கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப்பரீட்சை

(கொழும்புத்துறை)

தேசிய கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை விஞ்ஞான பாடப் பரீட்சையும் 11 மணி தொடக்கம் 12 மணிவரை கணித பாடப் பரீட்சையும் நடைபெறவுள்ளன.

மாகாணமட்டப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டு செங்குந்தா இந்துக்கல்லூரியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்வதற்கான இப் பரீட்சையில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-51)

## விளையாட்டு போட்டிக்கான திகதி நீடிப்பு

(யாழப்பாணம்)

மாற்றுத் திறனுள்ளோருக்கான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் திகதி எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, விண்ணப்பிக்க விரும்புவோர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் க. சிவகரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## யாழ்.செய்திகள்

## காலின் மீது உழவியந்திரப்பெட்டி தவறி வீழ்ந்ததில் காயம்

கரவெட்டிப் பகுதியில் வயல்வேலை செய்த சிறுவனின் கால் மீது உழவு இயந்திரப் பெட்டி தவறிவிழுந்ததில் சிறுவன் ஒருவன் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளான்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பி.ப.3 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கரவெட்டி கிழக்கு கட்டைவேலி வீதியைச் சேர்ந்த யோகநாதன் அர்ச்சுதன் வயது (16) என்ற சிறுவனே காலில் பலத்த உட்காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறான். (ஸ்ரீ-3-24)

## அங்கவீனமுற்றோருக்கான மாதாந்தக் கொடுப்பனவு

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்றநபர்களைக் கொண்டவறிய குடும்பங்களுக்கு மாதாமாதம் 3000 வழங்கும் திட்டத்தின் கீழ் சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகத்தினால் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 8 குடும்பங்களுக்கு 2011 ஆம் ஆண்டுக்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

எனவே மேற்படி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் திருமதி. அ. சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு.

ஆர். கந்தசாமி (கச்சாய் தெற்கு), ரி. பவளநாயகி (உதயசூரியன் வீதி), வி.சுந்தர லிங்கம் (மந்துவில் மேற்கு), செ. சபாநாயகம் (சரசாலை தெற்கு), தி. புஸ்பராணி (கைதடி வடக்கு), ர. கந்தராசா (இலுவம்பிள்ளையார் கோவிலடி, மீசாலை), ஆ. கந்தசாமி (மீசாலை தெற்கு), த. சற்குணராசா (மடத்தடி கிழக்கு , சாவகச்சேரி). (ஸ்ரீ-3-29)

## முறைசாராக் கல்வி பயிற்சி வகுப்புகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் முறைசாராக் கல்விக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் கடந்த 3 ஆம் திகதி அந்தந்தப் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டு இதுவரை அனுமதிக்கடிதத்தை பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு வந்து அனுமதிக் கடிதங்களை பெற்றுப் பயிற்சியில் இணையுமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## காலணிகள், புத்தகப்பைகள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.எயிட் நிறுவனமானது நலிவுற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. அதன் ஓர் அங்கமாக நாவாந்துறை றோ.க.பாடசாலைக்கு இன்று வியாழக்கி ழமை காலை 10 மணிக்கு காலணிகளும் புத்தகப்பைகளும் வழங்கப்படவிருக்கின்றன.

பாடசாலை அதிபர் எப்.எக்ஸ் அன்ரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரான்ஸ் வாழ் திருமதி.ஸ்ரீஸ்காந்ததேவா, ஹரிசண் முகநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

## விசேட கல்விச் செயற்பாடுகளுக்காக ரூ.ஒரு இலட்சத்து 29 ஆயிரம் நிதி ஒதுக்கீடு

(அல்வாய்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வட மராட்சி கல்வி வலயத்திற்கு விசேட கல்விச் செயற்பாடுகளுக்காக ஒரு இலட்சத்து 29 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியில் இருந்து ஆசிரியர்களுக்கான உட்படுத்தல், கல்வி விழிப்புணர்வுச் செயலமர்வு ஆகியனவும் நடைபெறவுள்ளன.

மேலும் விசேட தேவை மாணவர்களுக்கான விளையாட்டு விழா, சிறுவர் முகாம், மருத்துவ முகாம், மாற்று வலுவுடையோர் விளையாட்டு விழா என்பன நடத்தப்படவுள்ளன. இதுவரை காலமும் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்படாத மாற்றுவலுவுடைய மாணவர் களை வலயக் கல்வி அலுவலகத்தில் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி வடமராட்சி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்க வேண்டும். இம்மாணவர்களை புலோலி மெ.மி.த.க. பாடசாலை, பொன்னம்பல வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலுள்ள விசேட கல்வி அலகுகளில் எதிர்வரும் மார்ச் மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமாகும் கல்விச் செயற்பாடுகளில் இணைத்துக் கொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## கரப்பந்தாட்டப் போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு கைதடி நாவற்குழி வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-29)

# இன்று ஒரு தகவல்

## புகைப்பதை நிறுத்தினால்...

ஒரு நண்பர் ஆனந்தமாக சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார்.

இந்தப் பழக்கத்தை விட்டுவிடுங்களேன் என்று சொல்லிப் பார்த்தேன்.

'விட்டுவிடலாம் என்று தான் பார்க்கிறேன். ஆனால் முடியவில்லையே' என்றார்.

"மனம் வைத்தால் எல்லாம் முடியும்" என்றேன்.

அவர் கொஞ்சநேரம் யோசித்தார்.

அதன்பின் சொன்னார்:

'சரி, சேர் இதுதான் நான் பிடிக்கும் கடைசி சிகரெட் என்று சொல்லி மிகவும் அழுத்தமாக புகையை உள்ளுக்குள் இழுத்தார். அதன்பின் அந்தத் துண்டு சிகரெட்டை தூக்கி எறிந்து விட்டார்.

அதன்பின் அவருடைய உடம்பில் படிப்படியாக என்னென்ன மாற்றங்கள் நடக்கிறது என்று அமெரிக்க புற்றுநோய் மையம் ஒரு விபரப் பட்டியலே வெளியிட்டிருக்கிறது.

அது என்ன விபரம் தெரியுமா?

ஒருத்தர் புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்துகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படி அவர் நிறுத்திய 20 நிமிடங்களுக்குள் உயர் இரத்த அழுத்தம், உடல் வெப்பநிலை, நாடித்துடிப்பு போன்றவையெல்லாம் சரியான நிலைக்கு வந்து விடுகிறது.

8 மணிநேரத்துக்குள் இரத்தத்திலுள்ள காபன் மொனக்சைட்டின் அளவு குறைகிறது. ஒட்சிசனின் அளவு கூடுகிறது. சரியான அளவுக்கு வந்து விடுகிறது.

ஒருத்தர் கடைசி சிகரெட்டை தூக்கி எறிந்து விட்டார் எனில்... 24 மணி நேரத்துக்குள் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைந்து விடுகிறது.

48 மணிநேரத்துக்குள் உணர்வு நரம்புகளின் முனைப் பகுதிகள் மறுபடியும் ஒன்று சேர்கின்றன.

அதனால் நாவின் சுவையுணர்வு, மூக்கின் நுகரும் சக்தி என்பன மேம்படுகின்றன. நல்ல நிலமைக்கு வருகிறது. சிகரெட்டை நிறுத்திய 3 நாட்களுக்குள் மூச்சு விடுவது சுலபமாகிறது.

2 அல்லது 3 மாதங்களுக்குள் இரத்த ஓட்டம் மேம்படுகிறது.

நடப்பது சுலபமாகிறது.

நுரையீரலின் கொள்ளளவு 30 சதவீதம் அதிகரிக்கிறது.

ஒன்று முதல் 9 மாதங்களுக்குள் சுவாசக்குறைபாடுகள் நீங்குகிறது.

நுரையீரலில் உள்ள அசுத்தம் வடிகட்டும் திசுக்கள் சரியாக வேலை செய்யஆரம்பிக்கின்றன.

ஒரு வருடத்துக்குள் இதய அழுத்த நோய்க்கான வாய்ப்பு அரைவாசியாக குறைகிறது.

5 வருடத்திற்குள் ....

ஒரு நாளைக்கு ஒரு பைக்கெற் சிகரெட் பிடிப்பவர்களில் நுரையீரல் புற்றுநோயால் இறப்பவர்களின்எண்ணிக்கை அரைவாசியாக குறைகிறது.

புற்றுநோய்க் கலங்கள் சீரமைக்கப்படுகின்றன.

ஆக, ஒருத்தர் புகைப்பிடிப்பதை விட்டுவிடவேண்டும் என்று தீர்மானம் பண்ணி தன் கையில் இருக்கும் சிகரெட்டை இதுதான் கடைசி என்று சொல்லி தூக்கி எறிந்து விட்டால்...

அதன்பின் படிப்படியாக இவ்வளவு நன்மைகளும் மாற்றங்களும் ஏற்படுவதாக அமெரிக்க புற்றுநோய் மையம் தெரிவித்திருக்கிறது.

அதனால் புகைப்பழக்கம் உள்ளவர்கள் இதை யெல்லாம் கொஞ்சம் யோசித்து பார்த்து அந்தப் பழக்கத்தை விட்டுவிடுவது நல்லது.

ஆனால் அதையெல்லாம் சொன்னால் யார் கேட்கிறார்கள்?

என்னுடைய நண்பர் ஒருத்தர் புகைப் பழக்கம் உள்ளவர். அவர் என்னிடம் சொன்னார்.

"சிகரெட் பிடிக்கும் பழக்கத்தை விட்டு விடுவதென்பது என்னைப் பொறுத்த வரைக்கும் ஒன்றும் கஷ்டமான செயல் அல்ல அது மிகவும் சுலபம் என்றார்.

"எப்படிச் சொல்றீங்க?" என்றேன்.

நான் ஏற்கனவே 20 தடவை அந்த பழக்கத்தை விட்டிருக்கிறேன் என்றார் மிகவும் பெருமையாக.!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி

இலங்கை நூலகச் சங்கத்தினால் 2011-2012 கல்வியாண்டிற்கான நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி -தரம்3 இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி -தரம்-2 பகுதி-I கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள்.

இம்முறை இக்கற்கை நெறி இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ். நிலையத்திலும் நடாத்தப்பட வுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் யாழ் நிலைய ஒருங்கிணைப்பாளருமான திருமதி. கல்பனா சந்திரசேகரிடம் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி ஆகும். ஸ்ரீ

## மரக்கறிகளின் விலைகள் மேலும் வீழ்ச்சியடையும்

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் பெறப்படும் அறுவடைகள் சந்தைக்கு கிடைக்கப் பெற்றவுடன் மரக்கறிகளின் விலைகள் மேலும் வீழ்ச்சியடையும் என்று வட்டாரத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாண வெங்காயம் மற்றும் பீற்றூட் ஆகியன தற்போது தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்கு கிடைத்த வண்ணம் உள்ளன. இவற்றின் விலைகள் தற்பொழுது பெருமளவில்குறைவடைந்துள்ளன.

சின்ன வெங்காயம் ஒரு கிலோவின் மொத்த விலை நேற்று முன்தினம் நூறு ரூபாவினால் குறைந்து இருப்பதாக பொருளாதார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி அதிகாரி சமந்த சூரியகொட தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் சின்ன வெங்காயம் 250 முதல் 300ரூபா வரையில் விற்பனை செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-9)

## விசேட கருத்தரங்கும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவினரால் நடாத்தப்படும் விசேட கருத்தரங்கும் கலந்துரையாடலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை தலைவர் பேராசிரியர் வி.பி சிவநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் ***யாழ். மாவட்ட கிராமிய அபிவிருத்தி தொடர்பான வாய்ப்புக்களும் சவால்களும்*** ஓர் நோக்கு தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண ஓய்வுபெற்ற பிரதித்திட்டப் பணிப்பாளர் எஸ்.சிவலிங்கம் கருத்துரைக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

## தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் யாழ்.பிராந்திய நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசியவியாபார முகாமை நிறுவனத்தின் (NIBM) யாழ்ப்பாண பிராந்திய நிலையம் இல.40, கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்பட வுள்ளது.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபி விருத்தி அமைச்சர் டலஸ்அழகப்பெரும, பாரம்பரிய கைத்தொழில்கள்மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் துமிந்த திசாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 240 | 190 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 280 | 300 | 300 | 290 |
| தக்காளி | 130 | 150 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 100 | 80 |
| கரட் | 110 | 120 | 150 | 120 |
| பூசணி | 60 | 60 | 80 | 60 |
| புடோல் | 70 | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 40-45 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 150 | 80 | 150 | 190 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 100 | 100 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 200 | 110 |
| கருணைக் கிழங்கு | - | 60 | 100 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 160 | 110 |
| லீக்ஸ் | 140 | 150 | 160 | 110 |
| பீற்றூட் | 70 | 100 | 120 | 100 |
| கறிமிளகாய் | - | 200 | 200 | 200 |
| போஞ்சி | 130 | 150 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | - | 150 | 200 | 150 |
| கீரை - 1 பிடி | 5-10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 50 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |

## இராசி பலன்

*24.02.2011*
*(மாசி 12, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு*
*சப்தமி முன்னிரவு 11.53 மணிவரை*
*விசாகம் முன்னிரவு 7.39 மணிவரை*
*இராகுகாலம் 2.00 - 3.30 மணிவரை*
*சுபநேரம் 8.00 - 9.30 மணிவரை*

**மேடம்** குழப்பங்கள் தீர குருவை வழிபட வேண்டிய நாள், உறவினர் வழியில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பெரியோரை, அனுசரித்து செல்வது நல்லது.

**இடபம்** அயலவர் வருகையால் கலகலப்பாக இருப்பீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

**மிதுனம்** மாற்று மருத்துவத்தால் உடல் நலம். சீராகும், உங்கள் கருத்துக்கு மதிப்பு கிடைக்கும், செய் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் கூடும்.

**கடகம்** தொழிலில் கூட்டாளிகளுடன் ஏற்பட்ட பகை மாறும், விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்பினைக் காணும் நாள், தாய்வழி உறவினர்களால் அனுகூல முண்டு, வாகன பழுது பார்க்கும் எண்ணம் மேலோங்கும்.

**கன்னி** எடுத்தகாரியத்தை எளிதில் நிறைவேற்றும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், தன்னம்பிக்கை அதிகரிக்கும், கௌரவமான நாள்.

**துலாம்** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், புத்தி சாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள், எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடி வரும் நாள்.

**விருச்சிகம்** தேவையற்ற கற்பனைகள் குடி கொள்ளும், பயணத்தால் பலன் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்துசேரலாம்.

**தனுசு** நண்பர்கள் வழியில் சுபசெலவுகள் ஏற்படலாம், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றம் செய்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** எடுத்த கருமங்கள் யாவும் எளிதில் நிறைவேறலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும், மனதிற்கு பிடிப்பான சில சம்பவங்கள் நடைபெறலாம்.

**கும்பம்** அதிகாரம் மேலோங்கும், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கும், இழுபறியாக இருந்த கருமமொன்று நடைபெறும்.

**மீனம்** தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், எடுத்தகாரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், முரண்பாடுகள் விலகும், கட்டுப்பாடான நாள்.

வளவன்

# தமிழர்களின் மீது விழும் ஒவ்வொரு அடியும் என்மீது விழும் அடியாக நினைத்து போராடுவேன்


## நடிகர் விஜய் தெரிவிப்பு

தமிழர்களின் மீது விழும் ஒவ்வொரு அடியும் என் மீது விழும் அடியாக நினைத்து போராடுவேன் என்று நடிகர் விஜய் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசால் தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை கண்டித்து விஜயின் மக்கள் இயக்கம் சார்பில் கண்டன பொதுக் கூட்டம் நாகை காடம்பாடி சாலையில் உள்ள வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நடிகர் விஜய் 4 மணிக்கு மேடைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்

ஆனால் 4 மணிக்கு திடீரென நாகையில் மழை பெய்ய ஆரம்பித்தது. ஆனால் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக காடம் பாடி மைதானத்தில் ரசிகர்களும் பொதுமக்களும் கூடியிருந்தனர். மாலை5.45 மணிக்கு நடிகர் விஜய் பொதுக் கூட்ட மேடைக்கு வந்தார்.

அப்போது திரண்டிருந்த ரசிகர்கள் கைகளை தூக்கி ஆரவாரம் செய்தனர். நடிகர் விஜய் ரசிகர்கள் கூட்டத்தை பார்த்து கையை அசைத்து அவர்களை உற்சாகப்படுத்தினார். அப்போது மேடை முன் திரண்டிருந்த இரசிகர்கள் மேடையை நோக்கி முண்டியடித்துக் கொண்டு வந்ததால் கூட்டத்தில் கடும் தள்ளு முள்ளு ஏற்பட்டது. இதன் காரணமாக பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



இதற்கிடையே நடிகர் விஜய் பொதுக்கூட்ட மேடையில் பேசிய போது, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்டு வருகின்றார்கள் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர். இதற்கு அரசியல் சாயம் பூச வேண்டாம். இங்கு நாம் இந்த கண்டன பொதுக் கூட்டத்தை நடத்துகிறோம். இது சென்னை கோட்டையை மட்டுமல்ல டில்லிக் கோட்டை வரை எட்டும்.

இலங்கை இராணுவத்தால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்ந்து வருகிறது. இதை மத்திய, மாநில அரசுகள் வேடிக்கை பார்க்கிறது.

கடந்த சில வருடங்களாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான மீனவர்களும் சிறை பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். நாகை மீனவர் ஜெயக்குமார் கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார். அவரின் கழுத்தைக் கயிற்றால் நெரித்து கொலை செய்து கடலில் தூக்கி வீசியுள்ளனர்.

இவ்வளவு நடந்தும் மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று தெரியவில்லை. இலங்கை இராணுவத்திடம் நாம் அடிபணிந்து கிடக்கிறோம் என்று அர்த்தம் அல்ல. நாம் புலிப்பால் குடித்த பரம்பரை. நான் அடிச்சா தாங்கமாட்ட, நாலுமாசம் தூங்கமாட்ட, மீனவர்கள் மீது தாக்குதல் தொடர்ந்தால் உலக வரைபடத்தில் இலங்கை காணாமல் போய் விடும். ஏதோ வந்தோம் நாம் கூட்டம் நடத்தினோம் என்று இருக்கக் கூடாது சேவை செய்ய வேண்டும்.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும் மீனவர்களின் நிலை குறித்தும் பிரதம மற்றும் முதல் அமைச்சருக்கு தந்தி அனுப்ப வேண்டும். நாளை காலை நீங்கள் தந்தி அனுப்ப வேண்டும்.


இனி தமிழர்களின் மீது விழும் ஒவ் வொரு அடியும் என் மீது விழும் அடியாக நினைத்து போராடுவேன் என்றார். (ஸ்ரீ-2)

# திருமாவளவன் திருப்பியனுப்பப்பட்டமைக்கு நடிகர் சத்யராஜ் கடும் கண்டனம்

பார்வதி அம்மாளின் உடலுக்கு அஞ்சலி செலுத்த திருமாவளவனுக்கு இலங்கையில் அனுமதி அளிக்காததற்கு நடிகர் சத்யராஜ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நடிகர் சத்யராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபா கரனின் தாயார் பார்வதி அம்மாள் மரணம் அடைந்ததற்காக உலகத் தமிழர்களுடன் சேர்ந்து நானும் வருத்தப்பட்டேன். பார்வதி அம்மாளின் மறைவுக்கு அனுதாபம் தெரி விப்பதற்காக சென்னை தியாகராஜ நகரில் உள்ள ஒரு பள்ளியில் பழ.நெடுமாறன், வைகோ ஆகிய இருவரின் தலைமையில் இரங்கல் கூட்டம் இடம்பெற்றது. அங்கு சென்று நான் அஞ்சலி செலுத்தினேன்.



பார்வதி அம்மாளின் உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்துவதற்காக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் இலங்கைக்கு செல்ல இருந்தார். அதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்து இருக்கிறது. இதற்காக என் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இதிலிருந்து இலங்கையில் தமிழர்களுக்கு சுதந்திரம் வழங்கப்படவில்லை என்று தெரிகிறது என அவ்வறிக்கையில் நடிகர் சத்யராஜ் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கைதடி விக்னேஸ் வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் தென்மராட்சி பாடசாலை அதிபர்கள் அனை வரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்ம ராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேம காந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)




யாழ். DFCCவங்கியின் அதி சிறந்த லீசிங் முறையில் ஒரேநாளில் புத்தம் புதிய கார் ஒன்றை TATA dimo நிறுவனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் சதீஸ் பெற்றுக்கொள்வதையும் அருகில் DFCC வங்கி முகாமையாளர் மற்றும் வங்கியின் கொடுகடன் உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்

# இராணுவத்தின் தேசிய புலனாய்வுப் பிரிவின் இணையத்தளம் ஊடுருவித் தாக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் கீழ் செயற்படும் தேசியப்புலனாய்வுப் பிரிவின் இணையத்தளம் அண்மையில் ஊடுருவித் தாக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மிகவும் பாதுகாப்பான முறையில் அமெரிக்க நிபுணர்களின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டிருந்த தேசியப் புலனாய்வுப் பிரிவினரின் இணையத்தளம் மீதான இணையத் (சைபர்) தாக்குதல் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இணையத்தளம் தாக்கப்பட்டதன் காரணமாக அதில் பாதுகாக்கப்பட்டிருந்த இரகசிய தகவல்கள் திருடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமே பாதுகாப்புத் துறை அதிகாரிகளின் அதிர்ச்சிக்கான காரணம் என்று மேலும் தெரியவருகின்றது.

தற்போது அவ்விணையம் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியால் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ள போதிலும் இலங்கையின் பாதுகாப்புத் துறையுடன் தொடர்பான இணையத்தளங்கள் எதிர்காலத்தில் ஊடுருவப்படாமல் பாதுகாக்கப்படுவதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் உதவியைக் கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போது இலங்கையின் புலனாய்வுத்துறையின் கீழ் இயங்கும் புலம் பெயர் தமிழர்களைக் கொண்டு எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு எதிரான இணையத் தளங்களை ஊடுருவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கென பாதுகாப்பு அமைச்சின்கீழ் தனியானதொரு பிரிவு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இல்லமெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வித்தியாலயத்தின் பழைய மாணவரும் வடமாகாண ஆளுநரின் செயலாளருமான எஸ். ரங்கராஜா, கௌரவவிருந்தினராக கொழும்பு பழைய மாணவர் சங்க பொருளாளரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் பணி புரிபவருமான ரி.திருவருட்செல்வரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

### ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால்

# உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களின் உயர்கல்வி நடவடிக்கைகளுக்கு நிதியுதவி

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கத்தவர்களுடைய பிள்ளைகள் 10 ஆயிரம் பேருக்கு அவர்களுடைய உயர் கல்வி நடவடிக்கைகளுக்காக 12 ஆயிரம் ரூபாவை நிதியுதவியாக வழங்குவ தற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை தீர்மானித்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் அந்தந்த துறைகளின் கீழ் அதிகபுள்ளிகளைப்பெற்ற பிள்ளைகளில் 10 ஆயிரம் பேர் இது தொடர்பாக தெரிவு செய்யப்படவுள்ளனர். நிதி உதவிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் 9'X4' அளவுடைய முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையை பிராந்திய அலுவலகம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை, இல. 70, மார்ட்டின் வீதி ,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபாலில் அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு முகாமையாளர்- புலமைப் பரிசில், புலமைப்பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கை நிதிய சபை, இல. 92, கிருளவீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். (ஸ்ரீ)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா தர தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பயிற்சி நெறியில் NCICT சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் இது தடவைகளுக்கு மேற்படாமல் திறமைச் சித்தியடைந்திருத்தல் அல்லது க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் கணனி தொடர்பான அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர் ,முகவரி,பிறந்த திகதி,தேசிய அடையாள அட்டை இலக்கம்,கல்வித் தகைமைகள் என்பவற்றை குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA ,இலக்கம் 07, கோயில் வீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் NDICT இக்கான விண்ணப்பம் என த்வறாது குறிப்பிடப்பட வேண்டும். மேலதிக தகவல்களுக்கு மேற்குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் அமைந்துள்ள NAITA , அலுவலகத்தில். தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் Room boy கற்கை நெறியில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்போர் க.பொ.த (சாதாரண தர) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதி அன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். தகுதியுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றை குறிப்பிட்டு சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA, இலக்கம் 07, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அத்துடன்காகித உறையின் இடது பக்கமேல்மூலையில் Room boy இக் கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும். (ஸ்ரீ)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் உளவியல் பகுதி வருகை விரிவுரையாளரும் உள சமூக நிறுவனங்களின் உள ஆற்றுப்படுத்தல் பயிற்றுநருமான அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரனின் எழுதிய ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல் எனும் உள வளத்துணை நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 திகதி திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ். கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட ஆயா மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் இந்நூலானது அகவொளி குடும்ப வள ஆற்றுப்படுத்தல் நிலைய வெளியீடாக வெளிவருகின்றது. எனவே இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள். (ஸ்ரீ-2)

# பன்னிரு திருமுறைகள் முற்றோதல் நிகழ்வு

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் கடந்த 15 ஆம் திகதி தொடங்கிய பன்னிருதிருமுறைகள் முற்றோதல் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி நிறைவடையவுள்ளது. இதனையொட்டி ஓதுவார் கௌரவிப்பும் சிறப்புரையும் நடைபெறவுள்ளது. தேவஸ்தானத் தலைவி திருமதி தேவகி தனராஜா தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பொது நூலக பிரதம நூலகர் ச. தனபாலசிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ)

# சுவரொட்டி மற்றும் பதாகைகள் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களுக்கு சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்புக்குழுக்களுக் கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இப்போது பிரசார நடவடிக்கைகளுக்காக வேட்பாளர் கள் பிரச்சினை எதுவுமின்றி சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் பயன் படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை ,மேலும் 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். இதற்கிணங்க திருகோணமலை நகர சபை ,குளியாப்பிட்டிய நகர சபை, திருக்கோவில் பிரதேச சபை ,ருவன்வெல்ல பிரதேச சபை மற்றும் கிரிபாவ பிரதேச சபை ஆகிய 5 சபைகளுக்கான தேர்தல்களே ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே 59 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)




★ 1387 - நேப்பில்ஸ் மற்றும் ஹங்கேரி மன்னன் மூன்றாம் சார்ள்ஸ் கொல்லப்பட்டான்.

★ 1582 - கிரகொரியின் நாட்காட்டி பாப் பரசர் 13ஆவது கிரகொரியினால் அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1739 - இந்தியாவின் முகலாய மன்னன் முகமது ஷாவின் படையை ஈரான் மன்னன் நாதிர் ஷாவின் படை முறியடித்தது.

★ 1826 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கும் பர்மா மன்னன் ஆவாவுக்கும் இடையில் ஏற்பட்ட உடன் பாட்டினை அடுத்து முதலாம் பர்மியப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1875 - அவுஸ்திரேலியக் கிழக்குக் கரையில் எஸ்.எஸ் கோத்தன்பேர்க் என்ற கப்பல் மூழ்கியதில் 102 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1881 - சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1918 - எஸ்தோனியா விடுதலையை அறிவித்தது.

★ 1920 - நாசிக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1942 - வொயிஸ் ஒஃப் அமெரிக்கா ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

★ 1945 - எகிப்தியப் பிரதமர் அகமது மாஹிர் பாஷா நாடாளுமன்றத்தில் வைத்துக் கொல்லப்பட்டார்.

★ 1981 - கிரேக்கத்தில் எதன்ஸ் நகரில் நிகழ்ந்த 6.7 ரிக்டர் நிலநடுக்கத்தினால் 16 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1999 - கிழக்கு சீனாவில் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 61 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2007 - மணிப்பூர்,தமெல்லாங் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

★ 1304 - இபின் பட்டுட்டா, பயணி.

★ 1886 - ஆர்.முத்தையா, தமிழ் தட்டச்சுப் பொறியை உருவாக்கியவர்.

★ 1948 - ஜெ.ஜெயலலிதா, முன்னாள் தமிழ் நாட்டு முதலமைச்சர்.


★ 1955 - ஸ்டீவ் ஜொப்ஸ், அப்பிள் கணனி நிறுவனத்தைத் தொடங்கியவர்களுள் ஒருவர்.

## இறப்புகள்

★ 1925 - ஹீஜால்மார் பிராண்டிங், நோபல் பரிசு பெற்ற சுவீடன் பிரதமர் (பி.1860)

★ 1986 - ருக்மிணி தேவி அருண்டேல், நடனக் கலைஞர், கலாக்ஷேத்திரா நடனப் பள்ளியினை நிறுவியவர். (பி.1904)


**1969 - மரைனர் 6 விண்கலம் செவ்வாய் கோளுக்கு ஏவப்பட்டது.**





யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் திருமதி வே.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்தயாளன், அவரது பாரியார் மற்றும் விருந்தி னர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற மாணவிக்கு திருமதி றோகினி தயா ளன் வெற்றிக்கிண்ணம் வழங்குவதையும் படங்களில் காணலாம்

# அரசின் இயலாமையை மூடி மறைக்கவே உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைப்பு



## ஐ.தே.க பொதுச் செயலர் தெரிவிப்பு

அரசாங்கத்தின் இயலாமையை மூடி மறைப்பதற்காக தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். இடைக்கிடையே தேர்தல்களை நடத்துவது குறித்து தமது கட்சி கடும் அதிருப்தி அடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காகவே அரசாங்கம் ஒரே தடவையில் தேர்தல்களை நடத்தாது இவ்வாறு இடைக் கிடையே நடத்துகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். 60 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியிலும் அரசாங்கம் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை திருகோணமலை நகரசபை, திருக்கோவில்,ருவான்வெல்ல, குளியாப்பிட்டி பிரதேசசபைகள் அடங்கலாக மேலும் ஏழு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மன்னார் மக்களுக்கு நட்டஈடு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட மக்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் அமைச்சர்களான சந்திர சிறி கஜதீர மற்றும் றிசாத் பதியுதீன் ஆகியோரினால் வழங்கி வைக்கப்பட்டன.

வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாட் பதியுதீன் மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சராக இருந்த காலத்தில் அந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாருக், எம்.பி.பாருக் ஆகியோரும் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# மனித உரிமை ஆணைக்குழுவின் முதலாவதுஅமர்வு இன்று

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் முதலாவது அமர்வு இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

18ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அமையப்பெற்ற நாடாளுமன்ற சபையால் மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்களது பெயர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு முன்மொழியப்பட்டுள்ளன.

ஓய்வுபெற்ற நீதியரசர் பிரியந்தபெரேரா தலைமையிலான இந்த ஆணைக்குழுவிற்கு தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் கலாநிதி ஜெசீமா இஸ்மாயில், முன்னாள் பொலீஸ் மா அதிபர் ரி. ஆனந்த ராஜா, முன்னாள் அரச பகுப்பாய்வாளர் நாயகம் கலாநிதி ஆனந்த மெண்டிஸ் மற்றும் பேர்னாட் சொய்ஸா ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நியமனத்தை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ கடந்த வாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# தேர்தல் முடிவுற்றதும் சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்க திட்டம்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவான பாராளுமன்ற பேரவையின் கீழ் வருகின்ற சுயாதீன ஆணைக் குழுக்களை உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

அரசியலமைப் பின் 18 ஆவது திருத்த சட்டம் நிறை வேற்றப்பட்டு சில மாதங்கள் கடந்து விட்டன. இந்நிலையில் 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவான பாராளு மன்ற பேரவையின் கீழ் வருகின்ற சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் செயற்பாடுகள் விரைவில் இடம்பெறும்.

இந்த விடயத்தில் சற்று காலதாமதமாகி விட்டது என்பதனை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் விரைவில் சுயாதீன ஆணைக் குழுக்களை நாங்கள் நிறுவுவோம்.

தற்போது உள்ளூராட்சி தேர்தல் செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் உள்ளூராட்சி தேர்தல் முடிவுற்றதும் சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுப்போம். (ஸ்ரீ-2)

# நீதிமன்ற உத்தரவின்றி உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு கபே அமைப்பு எதிர்ப்பு

(கொழும்பு)

நீதிமன்ற உத்தரவின்றி 60 உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை தேர்தல் திணைக் களம் ஒத்திவைத்தமையானது முயல்களுடன் உறங்கிக் கொண்டு நாய்களுடன் வேட்டைக்கு செல்லும் நடவடிக்கைக்கு ஈடானது என சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தலுக்கான அமைப்பு (கபே) தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள 60 உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை ஒத்திவைக்க தேர்தல் திணைக்களம் எடுத்துள்ள தீர்மானம் குறித்து கபே அமைப்பு கடும் விசனத்தையும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளது.

தேர்தல் திணைக்களத்தின் இந்த தீர்மானம் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 262 ஆவது சரத்தை மீறும் செயல் எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டதால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமையானது இலங்கை வரலாற்றில் முதன் முறையான சம்பவமாகும். நீதிமன்றம் மூன்று உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை மாத்திரம் ஒத்திவைக்குமாறு உத்தரவிட்டிருந்தது.

நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்படமால் அந்த தீர்ப்பை முன்கூட்டியே அறிந்து கொண்டதுபோல் ஏனைய உள்ளூராட்சி சபைகளின் தேர்தலை ஒத்திவைத்தது ஆச்சரி யமானது. அது மாத்திரமல்ல தேர்தல் சட்டங்கள் மூலம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தேர்தல் ஆணையாளர் பலவந்தமாக கைப் பற்றிக்கொண்டுள்ளார்.

தேர்தல் திணைக்களம் அரசியல் தேவைகளுக்கு அமைய தீர்மானங்களை எடுத்துள்ளதன் மூலம் தேர்தல் முறையில் காணப் படும் சுதந்திரம் மற்றும் நீதி எப்படியானது என்பது தெரியவந்துள்ளது.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தேர்தல் மனுக்களின் தேர்தல் ஆணையாளர் ஒரு தரப்பினர் மாத்திரமே இவ்வாறான நிலையில் தேர்தல் திணைக்களத்தின் தீர்மானம் நீதிமன்றத்திற்கு அழுத்தங்கள் கொடுப்பதாக அமைந்துள்ளது. வேட்பு மனுக்களில் காணப்பட்ட குறைபாடுகளை ஆராய்ந்த பின்னரே தெரிவத்தாட்சி அதிகாரிகள் அவற்றை நிராகரித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் நீதிமன்ற உத்தரவின்றி தேர்தலை ஒத்திவைத்தது அடிப்படையற்றது எனவும் கபே அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்ந்த மனிதநேயப் பணிபுரிகின்ற

திரு.இ.ச.பேரம்பலம் நாகரெத்தினம்



ஐயா அவர்கட்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 'மனிதநேய ஈகையாளன்' என்ற கௌரவப் பட்டம் வழங்கியமையை இட்டு நாம் பேருவகை கொள்கின்றோம்.


அவரின் அளப்பரிய பணி எத்திக்கும் பரவட்டும். அவரின் ஈகையினால் ஏதிலிகள் நல்வாழ்வு பெறட்டும். அவரைப் போன்று ஈகையாளர் எம்மண்ணில் பெருகி வறுமை அகலட்டும்.

பேரம்பலம் நாகரெத்தினம் ஐயா இன்னும் பல்லாண்டு வாழ்ந்து ஈகைச்சுடர் பரப்ப வேளாங்கன்னி அன்னையின் அருள் வேண்டி நிற்பது

டினோஷன் பல்பொருள் வாணிபம், ஊர்காவற்றுறை.

(ச-2528)

# கள்ளிக்காட்டு இதிகாசம்



கவிப்பேரரசு வைரமுத்து

முதுகு பாரத்தையெல்லாம் சுவத்துல சாத்திவச்சிட்டு கெண்டக்காலுக்கு மேல மேசல ஏறிநிக்கிற மாதிரி ரெண்டு காலயும் நீட்டிக்கிட்டு, கையிலயிருந்த காப்பித்தண்ணிய ஆத்திக் குடிக்கிறேன் பாருன்னு டம்ளர இடப்பக்கமிருந்து வலப்பக்கம் சுத்தி பெறகு வலப்பக்கமிருந்து இடப்பக்கம் சுத்தி, அப்படியும் சூடா இருக்குன்னு 'உஸ்ஸு' உஸ்ஸு'ன்னு ஊதிக்கிட்டிருந்தா கலுவத்தேவர் பெண்டாட்டி.

"வாங்க! சம்பந்தக்காரக வாங்க"

பேயத்தேவரக் கண்டதும் எந்திரிக்காம லேசா எடம் மாத்தி ஒக்காந்து மரியாத காமிச்சாக புருசனும் பொண்டாட்டியும்.

கொஞ்சநேரம் அங்க காத்தாடவும் இல்லாம வார்த்தையாடவும் இல்லாமப் புழுக்கமா இருந்துச்சு.

"வராதவக வந்திருக்காக. இருந்து சாப்பிட்டுட்டுத்தான் போகணும். யம்மா மின்னலு! அந்த வெடக்கோழியப் புடிச்சு அடி! ஏ முருகாயி! கல்லுக் கில்லுப் பாத்து நெல்லுக்கஞ்சி காச்சு"

பேயத்தேவர் உத்தரவு பறந்தது.

"ஆமா நெல்லுக் கஞ்சி காச்சி நிதானமாக் கோழிச்சாறு குடிக்கிற பக்குவத்துலயா நம் ஒறவு இருக்கு?"

என்னமோ ஒரு யுத்தத்துக்கு சங்கூதுற நீளத்துல நீட்டி முழக்குனா கலுவத்தேவர் பொண்டாட்டி.

"ஏ சும்மாயிரு கழுத. நம்ம என்ன சண்ட சத்தம் போடவா வந்திருக்கோம். ரெண்டுல ஒண்ணு கேட்டுட்டுப் போகத்தானே வந்திருக்கோம்."

குடைக்கம்ப நீட்டிப் பொண்டாட்டிய ஒரு தட்டுத் தட்டினார் கலுவத்தேவர்.

அவுக ஏதோ ஒரு உள்கருத்தோட வந்திருக்காகங்கிறதப் புரிஞ்சுகிட்ட பேயத்தேவர் தாவாரத்துல துண்ட விரிச்சுத் தானும் ஒக்காந்தார்.

"உச்சி மரத்துல இருக்கிற வண்டே! ஒரு சொல்லுப் பொறுத்துக்கிட்டா எதுக்கு வருது சண்டைம்பாக, எதாயிருந்தாலும் பொறுமையாப் பேசுவோம்; ஒண்ணுக்கொண்ணு கலந்துபேசி ஒத்துப் போவோம்."

பேயத்தேவர் சொன்ன சொல்லில் ஒரு பெரிய மனுசனுக்கான பக்குவம் இருந்துச்சு.


"அய்யா நீங்க பெரிய ஆளுக. ஒங்கள மாதிரி சொலவம் சொல்லிப் பேசுறதுக்கு எங்களுக்குச் சக்தி பத்தாது. சுத்தி வளைக்காமச் சொல்லிப்புடறேன். ஒண்ணு ஒத்து வாழணும்; இல்லாட்டி அத்து வாழணும். எம் மக கலுவாயி ஆறேழு வருசமா வாழாவெட்டியா - மூஞ்சி செத்துப் போயி மோட்டு வளையைப் பாத்து ஒக்காந்திருக்கா. ஒண்ணு அவள வச்சுப் பொழைக்கணும்; இல்லாட்டி தாலிய வாங்கிட்டு ஆள விட்டுரணும்; நீங்க தாலிய வாங்கிக்கிட்டா அன்னைக்கே இன்னொரு தாலி கட்டத் தாய்மாமன்காரன் தயாராயிருக்கான். எங்க பொண்ண வச்சுப் பொழைக்கிறீகளா? இல்ல அத்து விட்றீகளா?

பேயத்தேவர் ஒரு பேச்சும் பேசல. கசப்பான பேச்சுன்னாலும் கலுவத்தேவர் பேசுறது நியாயமான பேச்சுன்னு அவருக்குத் தெரியுது.

"இன்னைக்கு ஒரு பொழுது இருங்க. நல்ல பதிலோட நாளைக்குப் போகலாம்."

அவுகள ஆசுவாசப்படுத்திட்டு மொக்கராசு வெரட்டிப் புடிச்ச வெடக்கோழியப் பறிச்சுக்கிட்டே அவன் காதுல சொன்னாரு. "போயி... செவத்தவீரனக் கூட்டியாடா!"

அவருக்குத் தெரியும். அந்தச் சாராயம் காச்சிப் பயலுக்கு நல்ல புத்தி சொல்லிக் கூட்டியார செவத்த வீரன்தான் லாயக்கு. அப்படியிருந்தும் அவர் போட்ட



போட்டு வெருட்டுப்பெத்து ஓடி வந்த கழுதை மாதிரி மூக்கு வெடைக்க நின்னான் சின்னு.

நடுச் சாமத்திலேயே பத்துப் பதினஞ்சு பெரிசுகளாக் கூடிப் பஞ்சாயத்தைக் கூட்டி ஆளுக்கொரு யோசனை சொல்லி மொத்தமா முடிவெடுத்தாக.

ஒண்ணு:

கலுவத்தேவர் மக கலுவாயிய பேயத்தேவர் மகன் சின்னு மறுபடியும் வச்சுப் பொழைக்கிறது.

ரெண்டு:

குடியிருக்க ஆளில்லாம அடிமாண்டு போயி இப்ப திருட்டுப்பன்னி அறுக்கிற இடமாக் கெடக் குற சின்னு வீட்டைக் கலுவத்தேவர் சொந்தச் செலவில கட்டிக் குடுத்திடறது.

மூணு:

சாராயம் காச்சுற பொழப்ப விட்டுட்டு, சின்னு புதுசாத் தொழில் செஞ்சு பொழைச்சுக்கிறதுக்கு அப்பனாகப்பட்ட பேயத்தேவர் ஆயிர ரூவா குடுத்திடறது.

## இதிகாசம்

கணக்கு தோத்துப் போச்சு. அவனக் கூட்டிவரப் போன செவத்தவீரன் முகரடி (அவமானம்) வாங்கித் திரும்பி வந்ததுதான் மிச்சம்.

நடுச்சாமம். ஒறக்கத்த இழுத்துப் பொத்திக்கிட்டு ஒடுங்கிக் கெடக்கு ஊரு. வெயில் கால ராத்திரியில பாம்பு, தேளு, பூரான், நட்டுவக்காலி கூட, பொந்துக்குள்ள இருந்தா வெந்துபோயிருவோம்னு வெளிய வந்து படுத்திருக்குதுக. மனுசங்க மட்டும் வெக்கையில வீட்டுக்குள்ள படுத்திருக்க முடியுமா? வாசல்ல - தெருவுல - அம்பலக்கல்லுல - மரத்தடியில கண்டேத்தியாப் படுத்திருக்குதுக ஊர்ச்சனங்க. கல்லக் கொண்டு எறிஞ்சாலும் நாய்கூட முழிக்காத நடுராத்திரி. மரத்துலயிருந்து எல விழுந்தாலும் சத்தங்கேக்குற அந்த நிசப்தமான ராத்திரியில நடுவீட்ல இடிவிழுந்தமாதிரி சத்தம் போட்டுக் கத்துனான் சின்னு.

"ஏ மானங்கெட்ட நாய்களா! எம் பொண்டாட்டியப் பொண்ணு கேக்குறான் ஒருத்தன்னு எங்க வீட்லயே வந்து சொல்றீகளா? ஒங்கள வெட்டிச் சாராய அடுப்புக்கு வெறகா எரிக்காட்டி நான் பேயத்தேவனுக்குப் பெறந்தவன் இல்ல."

தாறுமாறாப் பேசிக்கிட்டு வந்து, வெட்டரிவாளக் கொண்டு தன் வீட்டுக்கதவையே வெட்டிக்கிட்டிருந்தான் சின்னு. ஊரே முழிச்செந்திருச்சு ஒக்கார, அவன் சத்தம் கேட்டுக் குட்டிநாய்களும் பெட்டநாய்களும் ஒண்ணு மேல ஒண்ணு 'வள் வள்'ன்னு விழுந்து குதற, நெல்லுச் சோறும் கோழிச் சாறும் அடிச்ச மப்புல பொணங்களாக் கெடந்த மாமனாரும் மாமியாரும் பொசுக்குன்னு எந்திருச்சு ஒக்கார, பேயத்தேவர் ஓடிவந்து கதவத் தெறந்தார். அவரக் கண்டதும் அருவா ளயும் தலை யையும் கீழ தொங்கப்

ஒரு நல்ல புத்தி வந்து எல்லாத்துக்கும் சரி சொன்ன சின்னு, சாராயம் காச்சக் கூடாதுங்கிற சிக்கலான தீர்ப்புக்கு மட்டும் சிக்கல; பளிங்குக் கரையில விழுந்த மீனுமாதிரி 'கழுக் மொழுக்'ன்னு வழுக்குனான்.

"உம்முன்னு ஒரு வார்த்த சொல்றா சின்னு. ஒறக்கம் வருதா இல்லையா" கொட்டாவி விட்ட ஒரு பெரிசு அவனக் கெஞ்சியது.

அவனும் தலையாட்டிட்டுப் போயிட்டான். பஞ்சாயத்துக் கலைஞ்சு பாய் தலகாணி தேடி, விட்ட இடத்திலிருந்து மறுபடியும் ஒறங்கிப் போனாக ஊர் ஆளுக. ஒறங்காத ஒரேயாளு பேயத்தேவர் தான். "எங்க போறது ஆயிரம் ரூவாய்க்கு? எப்படிப் பெரட்டுறது?"

யோசிச்சு யோசிச்சுப் பாத்தும் புத்தியில ஒண்ணும் ஒறைக்கல. கடைசியில என்ன பண்றது? குசேலன் வீட்ல குடிக்கக் கூழ் இல்லேன்னா கிருஷ்ணன் வீட்டுக் கதவைத்தான தட்டணும். வாரேன் வண்டிநாயக்கரய்யா! வாரேன்! நாங்கேட்டு என்னைக்கு நீங்க இல்லேன்னீக?

நாச்சார்வரம் டீக்கடையில் வண்டிநாயக்கர் இல்லை. கேட்டதுக்கு நாலைஞ்சு நாளாவே வல்ல - அவருக்கு மேலுக்குச் சொகமில்லைன்னு தகவல் சொன்னாக. ஒரு சவலப்பிள்ள மாதிரி தயங்கி தயங்கித்தான் நாயக்கர் வீட்டுக்குள்ள நுழைஞ்சாரு பேயத்தேவர்.

(வளரும்)



# ரணில் பொறுப்புணர்ச்சியின்றி செயற்பட்டு வருகின்றார்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்புணர்ச்சி யின்றி செயற்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் ரணில் விக்ரமசிங்க வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் தேர்தலில் போட்டியிடாவிட்டால் அந்தத் தேர்தலில் ரணில் ஆர்வம் காட்டுவதில்லை என குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் காரணமாகவே தேர்தல் பிரசாரப் பொறுப்புக்களை ஏனையவர்களிடம் ஒப்படைத்துவிட்டு வெளிநாட்டு விஜயம் மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சஜித் பிரேமதாசவிற்கு பொறுப்புக்களை ஒப்படைக்காது அவரை உதாசீனம் செய்துள்ளதாக அமைச்சர் மைத்திரிபால குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பிரஜைகள் லிபியாவிலிருந்து வெளியேற முயற்சி

அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடைபெற்று வரும் லிபியாவிலிருந்து ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பிரஜைகள் வெளியேற முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக எண்ணெய் நிறுவனங்களில் கடமையாற்றி வரும் பிரஜைகள் இவ்வாறு வெளியேறிச் செல்ல முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லிபிய நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை உத்தியோகப் பற்றற்ற வகையில் மூடிய கதவு கூட்டமொன்றை நடத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது லிபிய இராணுவம் வான் தாக்குதல்களை நடத்தி வருவதாக மற்றுமொரு சர்வதேச ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தலைநகர் ட்ரைபோலியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை இலக்கு வைத்து ஜெட் விமானங்களில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது குண்டுத்தாக்குதல் நடத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இரண்டு விமானிகள் மால்டாவில் தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

# இலங்கை விமானப்படையினர் ஆளில்லா விமானம் தயாரிப்பு

(கொழும்பு)

இலங்கை விமானப்படையினர் ஆளில்லா விமானமொன்றை தயாரித்துள்ளதாக விமானப்படைத் தளபதி ரொசான் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

குறித்த ஆளில்லா விமானம் தற்போது பரீட்சிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். புதிய என்ஜின் ஒன்று கொண்டு பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் ஆளில்லா விமானம் காட்சிப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

1980களில் விமானப்படையினர் சிறிய ரக விமானமொன்றை தயாரித்து பறக்கவிட்டதாகவும் இதேபோன்று உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி சிறியரக விமானமொன்றை தயாரிக்கும் திட்டம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் புதிய விமானங்களை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

எனவே அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு விளையாட்டுக் கழக பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# இந்தியா கம்பளம் விரிக்கிறது; இலங்கை அரசு அவமதிக்கிறது!

## திருமாவளவன் கண்டனம்

(சென்னை)

சிவப்புக் கம்பளம் விரிக்கும் இந்திய அரசை இலங்கை அரசாங்கம் ஓர் பொருட்டாகவே மதிப்பதில்லை! இந்திய தமிழக அரசுகள் கடுமையாக எச்சரிக்க வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் தலைவரும் இந்திய மக்களவை உறுப்பினருமான தொல். திருமாவளன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்து கொண்டு விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் அஞ்சலி செலுத்துவதற்காக கடந்த 21ஆம் திகதி நள்ளிரவு 12.30 மணியளவில் கட்சிப் பொறுப்பாளர்கள் வெற்றிச் செல்வன், இளஞ்சேகுவேரா ஆகியோருடன் கொழும்பு சென்றோம்.

கொழும்பு விமான நிலையத்தில் சிங்க அரசின் குடிவரவுத் துறை அதிகாரிகள் எங்களை வழிமடக்கி இலங்கைக்குள் நுழைய உங்களுக்கு அனுமதியில்லை இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லுங்கள் என்று கூறினர்.

நாங்கள் பிரபாகரனின் தாயாரின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே வந்திருக்கிறோம். வேறெதுவும் உள்நோக்கம் இல்லை. ஆகவே எங்களை அனுமதிக்க வேண்டும் என்று வாதாடினோம்.

அவ்வாறு அனுமதிக்க இயலாது. நீங்கள் வந்த அதே விமானத்தில் திரும்பிச் செல்லுங்கள் என்று வற்புறுத்தினர். நான் ஏற்கனவே பலமுறை இலங்கைக்கு வந்திருக்கின்றேன். இந்திய நாடாளுமன்றக் குழுவிலும் ஓர் உறுப்பினராக வந்து போயிருக்கிறேன். நான் சமூக விரோதி அல்ல. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் என்கிற முறையில் எனக்கு மதிப்பளிக்காவிட்டாலும் இந்திய அரசுக்காவது நீங்கள் மதிப்பளிக்க வேண்டும்.

இது தனிப்பட்ட முறையில் எனக்கு ஏற்பட்ட அவமானம் என்பதைவிட இந்திய அரசுக்கும் இந்திய தேசத்திற்கும் இழைக்கும் பெரும் அவமதிப்பே ஆகும். இதை இந்திய நாடாளுமன்றத்தில் ஓர் உரிமைப்பிரச்சினையாக எழுப்புவேன் என்றும் எச்சரிக்கை விடுத்தேன்.

மேலும் என்னையும் என்னுடன் வந்தவர்களையும் எதற்காகத் திருப்பி அனுப்புகிறீர்கள் என்பது தொடர்பாக எழுத்துப்பூர்வமான அறிக்கையினை அளிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தினேன். அவ்வாறு வழங்க இயலாது என்று மறுத்ததோடு எங்களை வலுக் கட்டாயப்படுத்தி அனுப்புவதிலேயே குறியாக இருந்தனர்.

ஈழத்தமிழர்களுக்கு மட்டுமின்றி தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் இந்திய ஆட்சியாளர்களுக்கும் சவால் விடுகிற வகையில் இலங்கையின் அணுகுமுறைகள் தொடர்கின்றன. ராஜபக்ஷவுக்கு சிவப்புக்கம்பளம் விரிக்கும் இந்திய அரசை ஓர் பொருட்டாகவே மதிப்பதில்லை என்பது இந்திய நாடாளுமன்ற உறுப்பினரான என்னை திருப்பி அனுப்பியதிலிருந்தே அறியலாம்

இந்நிலையில் இந்திய தமிழக அரசுகள் இலங்கையை கடுமையாக எச்சரிக்க வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் கேட்டுக் கொள்கிறது. மேலும் தமிழகத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டுமெனவும் விடுதலைச் சிறுத்தைகள் வற்புறுத்துகிறது.

நேரிலே அஞ்சலி செலுத்த முடியாவிட்டாலும் அன்னை பார்வதி அம்மாளுக்கு இலட்சோபலட்சக் கணக்கான விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் எமது செம்மாந்த வீரவணக்கத்தை தமிழகத்திலிருந்து செலுத்துகிறோம் என திருமாவளவன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (எ-1)

# ஸ்ரீ அம்மாபகவான் பாதபூஜை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தினரால் ஸ்ரீ அம்மா பகவான் பாத பூஜை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தொல்புரம் மத்தி கிராமத்தில் எஸ்.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அடியார்கள் கலந்து பாத தரிசனத்தை பெற்றுக்கொள்ளுமாறு ஆன்மீக மையத்தினர் அழைக்கின்றனர். (ஸ்ரீ-3)

# விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை சுண்டுக்குளி சனசமூக நிலையத்திலும் காலை 11.30 மணி தொடக்கம் மதியம் 1.30 மணி வரையும் பழைய பூங்கா வீதியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)





நீர்வேலி றோ.க.த.க பாடசாலையின் தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதையும் பாடசாலையில் இணைந்த புதிய மாணவர்களையும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.





வடமாகாண கல்வியமைச்சினால், நடாத்தப்பட்ட "புலர்ந்தது புதுவசந்தம்" எனும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவாந்தாவிற்கு நினைவுச் சின்னம் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- என்.குமார்)*

# இலங்கை-இந்திய உறவுகளில் விரிசலை ஏற்படுத்த சிலர் முயற்சி

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்படுத்த முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மீனவர் பிரச்சினைகளின் அடிப்படையில் இருதரப்பு உறவுகளின் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சில விடயங்கள் தொடர்பில் முரண்பாடு காணப்பட்ட போதிலும் அது இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை பாதிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் அனைத்து பாகங்களிலும் இவ்வாறு மீனவர்களுக்கு இடையில் பிரச்சினைகள் நிலவி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்டை நாடுகளுக்கு இடையில் எல்லைப் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுவது சிரமமானது என அவர் தெரிவித்துள்ளார். மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினைகளைப் பயன்படுத்தி குழப்பங்களை ஏற்படுத்த உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் முயற்சித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் தற்போதைய அரசியல் நிலவரமும் இந்தப் பிரச்சினைகளுக்கு ஏதுவாக அமைந்துள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக மாநில அரசாங்கங்களின் அழுத்தங்களுக்கு மத்திய அரசாங்கம் அடிபணிய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் மீனவர் பிரச்சினைக்கு இரு நாடுகளும் பாதகமற்ற அடிப்படையில் தீர்வு காணும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இந்தியாவிடமிருந்து உதவி பெற்றுக் கொண்டால் மட்டுமே ஜே.வி.பி. இந்தியாவை பாராட்டும் எனவும் ஏனைய சந்தர்ப்பங்களில் விமர்சனங்களை மட்டும் வெளியிடும் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

உதவி பெற்றுக் கொள்ளும் போது இந்தியாவை நல்ல நாடாகப் போற்றும் ஜே.வி.பி. ஏனைய சந்தர்ப்பங்களில் குறைகூறுவது பொருத்தமாகாது என அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# எல்லே,வலைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான எல்லே, வலைப்பந்து ஆகிய போட்டிகள் கடந்த வாரம் இடம்பெற்றது. இதில் எல்லே போட்டியின் இறுதிச் சுற்றில் சாவகச்சேரி ஶ்ரீ முருகன் விளையாட்டுக் கழத்தை எதிர்த்து விளையாடிய மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

வலைப்பந்துப் போட்டியின் இறுதிச் சுற்றில் சாவகச்சேரி ஶ்ரீ முருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய வரணி துர்க்கா விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (ஶ்ரீ-3-29)

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வாழ்க்கை வரலாறு தமிழில்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வாழ்க்கை வரலாறு தமிழில் நூல் வடிவம் பெற்றுள்ளது.

இந்நூல் சரசவி புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலை அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதியிடம் நூலாசிரியர் எஸ்.தில்லைநாதன் சம்பிரதாயபூர்வமாக கடந்த 23ஆம் திகதி கையளித்தார்.

இவ்வைபவத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், ஊடக அமைச்சுச் செயலாளர் டபிள்யூ.வி. கனெகல்ல, சிலோன் அஷோசியேட்டெட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் ஆசிரிய பீட பணிப்பாளர் சீலரத்தின செனரத் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஶ்ரீ-2)

# பொலிஸார் கட்சி அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸார், கட்சி அரசியலில் ஈடுபட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் தேர்தல்களை நடாத்த பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு தேவையான வகையில் பிரசாரங்களை மேற்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி வேட்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் தேர்தல் வன்முறைகளை பொலிஸார் கண்டு கொள்வதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல்களை ஒத்தி வைப்பதற்கு தேர்தல் ஆணையாளருக்கு உரிமை கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்டம் கட்டமாக தேர்தல்களை நடாத்துவதனால் பொதுமக்களின் பணம் வீண் விரயமாவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஶ்ரீ-2)

# லிபியாவிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

லிபியாவில் வாழும் இலங்கையர்களுக்கு ஆபத்து கிடையாது என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

லிபியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அங்குவாழும் ஆயிரத்து 200 இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. லிபிய நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# இடம்பெயர்ந்த மக்களுக்காக விசேட வாக்குச்சாவடிகள் அமைக்கப்படாது

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களுக்காக விசேட வாக்குச் சாவடிகள் அமைக்கப்படமாட்டாது என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

கடந்த தேர்தல்களைப் போன்று இந்தத் தடவை இடம்பெயர் மக்களுக்காக கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைக்கப்படமாட்டாது என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் வாக்குச் சாவடிகளுக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)


# சவுதியில் படுகொலையான பெண்ணின் சடலம் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டது

சவுதி அரேபிய எஜமானியால் கடந்த நவம்பர் 5 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் பெண்ணின் சடலம் நேற்று முன்தினம் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது.

இவரின் பெயர் செல்லத்துரை புஷ்பவல்லி (வயது 36) கண்டி மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்டவர். இவருக்கு 6 வயதுக்கும் 13 வயதுக்கும் இடையில் நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். கணவன் 2005 ஆம் ஆண்டு இறந்து விட்டார். குழந்தைகளைக் காப்பாற்ற வேறுவழி இல்லாமையால்தான் 2008 ஆம் ஆண்டு சவுதிக்கு வீட்டுப் பணிப் பெண்ணாகச் சென்றார்.

இவரின் திடீர் மரணம் படுகொலை என்று ஆரம்பகட்ட பிரேத பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது. இவரின் எஜமானி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# விதிகளை அமைத்தது யார்?



ஆன்மீகம் 26

என்னிடம் தவறாமல் கேட்கப்படும் கேள்விகளுள் ஒன்று....'கடவுள் இருக்கிறாரா, இல்லையா?'

ஆதிமனிதன் பயத்தால் ஆட்டுவிக்கப்பட்டான்.

திடீரென்று வானில் வெளிச்சக் கீற்றுகள், தடதடவென்று ஓசை, பொத்துக்கொண்டு கொட்டும் தண்ணீர், அளவிடமுடியாத வான்பரப்பு,



கணக்கிடமுடியாத நடசத்திரங்கள், எல்லைகள் புரியாத அலைகடல்... எதற்கும் காரணம் புரியாமல் மனிதன் மிரண்டான்.

இந்தப் பிரபஞ்சத்தின் பிரமாண்டத்தின் முன் தன்னை ஒரு தூசு போல உணர்ந்தான்.

தனக்குப்புரிபடாத சக்திக்குமுன் பணிந்து தன்னைப் பாதுகாக் வேண்டினான்.

மழையைக் கும்பிட்டான் சூரியனை வணங்கினான்.

அன்றிலிருந்தே அச்சத்தின் காரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டவரானார் கடவுள்!

பிறந்ததிலிருந்தே உங்கள் தாயும் தந்தையும் சமூகமும் கடவுள் உண்டு, கடவுள் உண்டு என்று சொல்லி வந்திருப்பதால் தான் நீங்களும் கடவுள் இருப்பதாக நம்புகிறீர்கள்!?

உங்கள் குடும்பத்தினர் எந்தக் கடவுளின் கட்சியைச் சேர்ந்தவர்களோ, அந்தக்கடவுளை மட்டும்தான் உங்களால் ஏற்றுக்கொள்ள முடிகிறது.

உங்களுக்குப் பழக்கமான ஜரிகையிட்ட உடைகளையும் ஆபரணங்களையும் அணிந்துதானே கடவுள் அருள்புரிவார்?

கலண்டர்களில் அச்சிட்ட தோற்றங்களில் வராமால், வித்தியாசமாக ஜீன்சும் ஜிப்பாவும் அணிந்து வந்தால், அவரைக் கடவுள் என்று ஏற்றுக் கொள்வீர்களா?

யானைகள் உலகத்துக்குப்போய் கடவுள் எப்படி இருப்பார் என்று கேளுங்கள். 'எங்களைவிடப் பெரிய உருவத்துடன், நான்கு தும்பிக்கைகளுடன் இருப்பதுதான் கடவுள்' என்று சொல்லும்.

எறும்புகளைக் கேட்டால், ஆறங்குலம் உள்ள பிரமாண்டமான எறும்புதான் தங்கள் கடவுள் என்று சொல்லும்

இந்தப்பிரபஞ்சத்தில் மனிதனைவிடப் பரிணாமவளர்ச்சி கண்டுவிட்ட வேறொரு உயிரினம் வேறெங்காவது இருக்கக்கூடும். அதனிடம் உங்கள் கடவுளைக் காட்டினால்,'சீச்சீ! கேவலம் மனிதனின் தோற்றத்தையா கடவுள் கொண்டிருப்பார்? அவர் எங்களைப்போலல்லவா இருக்கிறார்.!' என்று கைகொட்டிச் சிரிக்கும்.

தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளத் தெரியாத பலர் மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப் புறப்பட்டு விடுகிறார்கள். கடவுளைப்பற்றி உங்களுக்கு நேரடியனுபவங்கள் கிடையாது.

அதனால், அடுத்தவர்கள் சொன்னதை அப்படியே ஏற்று நம்பிக்கை வைத்தீர்கள் கோயிலுக்கு எதற்காக போகிறீர்கள்?

கடவுளை உணர்வதற்காகவா?

'அதைக்கொடுப்பா இதைக் கொடுப்பா காப்பாற்றுப்பா' என்று வேண்டிக் கொள்ளத்தானே?

உங்கள் கடவுள் நம்பிக்கைகள் பெரும்பாலும் பேராசை மற்றும் பயத்தின் அடிப்டையில்தானே வளர்க்கப்பட்டிருக்கின்றன?

உங்கள் வீட்டில் டஜன் கணக்கில் கடவுள் படங்களை மாட்டி வைத்திருக்கிறீர்களே, அதனால் வாழ்க்கையைப் பற்றிய உங்கள் அச்சம் விலகிவிட்டதா?

கடவுளர்களையும் சேர்த்து அல்லவா வீட்டுக்குள் வைத்துப்பூட்டி விட்டுப் போக வேண்டியிருக்கிறது?

கடவுள் என்பது உங்கள் அச்சத்தின் அடையாளமாக இருப்பதால்தான் பயபக்தி என்று ஒரு வார்த்தையை நீங்கள் ரசிக்கிறீர்கள்.

கடவுள் அன்பானவர் என்றால், அவரிடம் பக்தியிருந்தால் மட்டும் போதாதா? பயம் எதற்கு?

கடவுளை உணராதவர்கள்தான் இன்றைக்குப் பக்தியைப் பற்றி அதிகம் பேசுகிறார்கள்.

அப்படியானால் கடவுள் என்பவர் கற்பனைப் பாத்திரம்தானா?

அவரைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமா?

ஒரு சிறுவிதை பூமிக்குள் விழுந்ததும் மிகப்பெரிய விருட்சமாக வளர்கிறதே, எப்படி?

இந்த விதையில் இப்படிப்பட்ட மரம்தான் வளரும், இப்படிப்பட்ட பூதான் மலரும் என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறதே... இந்த விதிகளை அமைத்தது யார்?

உங்களை மீறிய சக்தியை கடவுள் என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

ஆக, தொடங்கிய இடத்துக்கே வந்துவிட்டோம்

கடவுள் இருக்கிறாரா, இல்லையா?

இதைத் தெரிந்து கொள்ளும் ஆசை உங்களுக்குள் வந்துவிட்டால், நீங்கள் யாரிடம் கேட்டு அறிய முடியும்?

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# மக்கள் தகவல் தொடர்பியல்

01

## களஆய்வு

மக்கள் செய்தித் தொடர்பியல் (மாஸ் கொம்யூனிக்கேசன்) என்பது தனிநபர்கள் மற்றும் உட்பொருட்கள், மக்கள் செய்தி ஊடகம் வழியாகத் தகவலை ஒரே நேரத்தில் மக்கள் தொகையின் பல பகுதிகளுக்குப் பரப்புவதன் மூலமாக, பல்வேறு மட்டங்களின் தர்க்கரீதியான ஆய்வை விபரிப்பதற்குப் பயன்படுத்தப்டும் வார்த்தையாகும். இதனை பொதுவாக செய்தித்தாள் மற்றும் பத்திரிகை வெளியிடுதல், வானொலி, தொலைக் காட்சிமற்றும் திரைப்படம் ஆகியவற்றிற் குத் தொடர் புடையதாகப் புரிந்து கொள்ளலாம். அவற்றில் இவை செய்திகளைப் பரப்புவதற்காக மற்றும் விளம் பரப்படுத்துவதற்காக என இரண்டுக்குமே பயன்படுத்தப் படுகின்றன.

மக்கள் செய்தித் தொடர்பியல் ஆய்வானது தகவலைப்பரப்புதல் போன்ற ஊடக நிறுவனங்கள் மற்றும் செயல்பாடுகள், மற்றும் பொது மக்களின் கருத்தினை வலியுறுத்துதல் அல்லது செயற்படுத்தல் போன்ற ஊடக விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் பல்வேறு பல்கலைக்கழக இதழியல்துறைகள், மக்கள் செய்தித் தொடர்பியல் அல்லது "இதழியல் மற்றும் மக்கள் செய்தித்தொடர்பியல்" கொண்ட பாடசாலைகளை அல்லது கல்லூரிகளைத் தோற்றுவித்துள்ளன. இதழியல், மக்கள் தொடர்புகள் அல்லது விளம்பரம் ஆகியவற்றின் நடைமுறைத்திறன்கிளை பயில்வதற்குக் கூடுதலாக அவர்கள் "மக்கள் செய்தித் தொடர்பியல்" அல்லது "மக்கள் செய்தித் தொடர்பியல் ஆய்வில்" செயல் திட்டங்களை வழங் குகிறார்கள். மக்கள் செய்தித் தொடர் பியல் ஆய்வு பொதுவாக சிலபள்ளிகளில் முனைவர் பட்ட ஆய்வுகளுக்குத் தரப்படும் தலைப் பாக இருக்கிறது. இதில் மாணவர் களின் ஆய்வின் கவனம் இதழியல் நடைமுறை, வரலாறு, சட்டம் ஆகியவையாகவோ அல்லது ஊடக விளைவுகளாகவோ இருக்கும்.

சில கல்லூரிகளினுள் துறைசார் கட்டமைப்புக்கள் மக்கள் செய்தித் தொடர்பியலின் தொழில்ரீதியான அல்லது தொழில்நுட்ப அம்சங்களில் தனித்த ஆய்வு மற்றும் கற்பித்தலாக இருக்கலாம்.

செய்திகள் மற்றும் தகவல்விநியோகிப்பதில் இணையத்தின் பங்கு அதிகரித்து வருவதுடன், மக்கள் செய்தித் தொடர்பியல் ஆய்வுகள் மற்றும் ஊடக நிறுவனங்கள், வெளியிடுதலின் குவிதல், ஒளிபரப்பு மற்றும் டிஜிற்றல் தொடர்பு ஆகியவற்றின்மீது கவனம் செலுத்துகின்றன.

தற்கரீதியான மக்கள்செய்தித் தொடர்பியல்துறை, வரலாற்று ரீதி யாக, அரங்கம் திரைப்படம் அல்லது பேச்சு ஆகிய துறைகளின் அடிப் படைக ளுடன் ஊடக ஆய்வுகள் மற்றும் தொடர்பியல் ஆய்வுகள் செயல் திட்டங்களில் இருந்து மாறுபடுகிறது. மேலும் தொடர்பியல் ஆய்வில் "அளவு சார்ந்த" பொருள் விளக்கக் கோட்பாடு, விமர்சன ரீதியாக அல்லது கலாச்சாரம் சார்ந்த அணுகுமுறை ஆகிய வற்றிற்கும் அதிகம் ஆர்வம் காட்டப் படுகிறது. மாறாக பல மக்கள் செய்தித் தொடர்பியல் செயல் திட்டங்கள் வர லாற்று ரீதியாக அனுபவத்திற்குரிய பகுப்பாய்வு மற்றும் அளவு சார்ந்த ஆய்வைச் சார்ந்தவை. இவை ஊடகச் செய்திகளின் புள்ளியியல் உள்ளடக்கப் பகுப்பாய்வில் இருந்து மதிப்பீட்டு ஆய்வு, பொது மக்கள் கருத்துக் கணிப்பு மற்றும் சோதனைசார் ஆய்வு ஆகி யவை வரை உள்ளன.

"புதிய ஊடகம்" மற்றும் "கணணி ஊடகத்தொடர்பு" ஆகியவற்றில் ஆர்வம், கல்வி நிறுவனங்கள் அதனைத் தன் வயப்படுத்தியதைக் காட்டிலும் வேகமாக வளர்ந்து வருகிறது.அவ்வாறே வளக்கமான வகுப்புகள் மற்றும் பட்டம் பெறுவதற்கான செயல்திட் டங்கள் தொடர்பியல் தொழில்நுட் பத் தில் உரு மாதிரியின் புதிய இயல்புக ளுக்குப் பொருந்தக் கூடியன வாக இல் லை. எனினும் இடைவினை ஊடகத்தின் ஆய்விற்கான தேசிய தர நிலைகள் லண்டனில் தொண்ணூறு களின் மத்தியிலிருந்து தோன்றின. இந்தப்பிரிவில் பாடத்திட்டப்பணி பல்கலைக் கழகத்திற்குப் பல்கலைக் கழகம் கணிசமான அளவில் மாறு படுகின்றன. மக்கள் செய்தித் தொடர்பியல் செயல் திட்டங்களின் பட்டதாரிகள், வழக்கமான செய்திகள் ஊடகம் மற்றும் வெளியீடுகள், விளம்பரம், மக்கள்தொடர்புகள் மற்றும் ஆய்வு நிறுவனங்கள் ஆகியவற்றிலும் பல் வேறு துறைகளில் பணிபுரியலாம்.

**மாஸ் மற்றும் கொம்யூனிக்கேசன் என்ற வார்த்தைகள்:**

மாஸ் என்ற வார்த்தை மிகப்பெரிய அளவு, வரம்பு அல்லது பரப்பு (மக்களின் அல்லது உற் பத்தியின்) மற்றும் செய்திகளின் வர வேற்பு ஆகியவற் றைக் குறிப்பிடு கிறது. "மாஸ்" என்ற வார்த்தை ஊடக பொருட்களின்பெறு நர்களின்முனைப் பற்ற, வேறுபடுத்த முடியாத நபர்க ளின்பெருந்திரளை உள்ளடக்கியதாக இருப்ப தைக் குறிப்பிடுகிறது. இது 'திரள் கலாச்சாரம்' மற்றும் திரள் சமூ கம் ஆகிய சில முந்தய திறனாய்வுக்குறிப் புடன் தொடர்புடைய உருவகமாக இருக்கிறது.

(தொடரும்)

நன்றி: இணையம்

# இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் நடைமுறை இடை நிறுத்தம்



## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

இரு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் நடைமுறை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்கள் வானொலி, தொலைக்காட்சிப் பொறுப்பதிகாரிகளை நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்தித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தச் சலுகையைப் பயன்படுத்தி சிலர் இலங்கைக்குத் துரோகம் இழைக்கும் சதிகளில் ஈடுபடலாம் என்ற சந்தேகம் எழுந்திருப்பதனால் இவ்வாறான பிரஜாவுரிமை கோரி விண்ணப்பிப்பவர்கள் பற்றி நன்கு விசாரணை செய்த பின்னரே அவர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும்.

இதுபற்றி ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்காக அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்று தற்போது நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னரே இரட்டைப் பிரஜாவுரிமையை வழங்கும் நடவடிக்கையை அரசாங்கம் மீண்டும் ஆரம்பிக்கும் என்று ஜனாதிபதி கூறினார். (ஸ்ரீ-2)

# உலகின் மிக மோசமான நகரங்களின் பட்டியலில் கொழும்பும் உள்ளடக்கம்

## நகர நிர்வாகத்தினர் கடும் ஆட்சேபம்

(கொழும்பு)

உலகின் மோசமான நகரங்களின் வரிசையில் இலங்கையின் தலைநகர் கொழும்பின் பெயரும் உள்ளடக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வாழ்வதற்குப் பொருத்தமற்ற உலகின் மிக மோசமான நகரங்களின் வரிசையில் கொழும்பு நகரின் பெயர் இணைக்கப்பட்டுள்ளது.தி எக்கனோமிஸ்ட் இன்டலிஜன்ஸ் யுனிட் அமைப்பினால் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்த ஆய்வு முடிவுகள் குறித்து கொழும்பு நகர நிர்வாகத்தினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். எந்த அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது என்பது தமக்கு தெரியாது எனவும் அறிக்கை முடிவுகள் அதிர்ச்சி அளிப்பதாகவும் கொழும்பு மாநகரசபை ஆணையாளர் ஒமார் காமில் தெரிவித்துள்ளார்.

தெற்காசியப் பிராந்திய வலய நாடுகளில் கொழும்பு நகரம் சிறந்த நிலையில் காணப்படுவதாகவும் வீதிப்போக்குவரத்து, நகரின் தூய்மைத்தன்மை போன்ற விடயங்களில் கொழும்பு நகரம் சிறந்து விளங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை எதன் அடிப்படையில் ஆய்வு நடத்தப்படுகின்றது என்பது புரியவில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொழும்பின் நிலைமைகள் திருப்திகரமாக அமைந்துள்ளதென சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட பல அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்போருக்கு எதிராக புதிய சட்டங்கள்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை பேணுபவர்களுக்கு பிணை வழங்காத வகையில் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனுமதி அளிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்கள் மட்டுமே ஆயுதங்களை வைத்திருக்க முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை பேணுவோர் அவற்றை ஒப்படைப்பதற்கு அரசாங்கம் பொது மன்னிப்பு காலங்களை அறிவித்திருந்ததாக சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான பொது மன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டிருந்ததர்கக் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும் அனுமதியற்ற வகையில் சிலர் ஆயுதங்களை வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




இலங்கை பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் 10 ஆயிரம் மாணவர்களுக்கு ஆங்கிலமொழி கற்கைக்காக ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான புலமைப்பரிசில் வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினீஸ், உயர்கல்வி பிரதியமைச்சர் நந்தமித்த ஏக்கநாயக்க மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# 2 மாதங்களுக்கு தேவையான நெல் கையிருப்பில் உள்ளது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இரண்டு மாதங்களுக்குத் தேவையான நெல் கையிருப்பில் உள்ள போதிலும் புதிதாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதால் அரிசித் தட்டுப்பாடு ஏற்படாது என அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஏற்பாட்டில் மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

வெள்ளம் ஏகரணமாக 14 வீதமான வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டபோதும் வடக்கில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஹெக்ட யரில் புதிதாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதால் அந்த நிலை சரிசெய்யப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசியல் இலாபம் பெறுவதற்காக நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படப்போவதாக எதிர்க்கட்சிகள் பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றன.

2 மாதங்களுக்கு தேவையான நெல் கையிருப்பில்உள்ளது.அவை நெல் சந்தைப் படுத்தும் சபை களஞ்சியங்களில் வைக்கப் பட்டுள்ளன.

எதிர்வரும் போகத்தில் வடக்கில் புதிதாக பயிரிடப்பட்ட வயல்களில் இருந்து அதிக அறுவடை எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் வெள்ளத்தினால் ஏற்பட்ட இழப்பு நிரப்பப்படும்.

அரசாங்கம் உள்நாட்டு பொருளாதாரத்தை நாசமாக்குவதாக எதிர்க்கட்சிகள் குற் றம் சாட்டுகின்றன. உள்நாட்டில் பொருட்க ளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் போது இறக்குமதி செய்யப்படும். உள்நாட்டில் பொருட்களின் விலை அதிகரித்தாலும் குற்றம் சாட்டுகின்றனர்.

உணவுத்தட்டுப்பாட்டின் போது பொருட்கள் இறக்குமதி செய்வது உள்நாட்டு உற்பத்தியை ஒழிப்பதாகாது. கிழங்கு விலை குறைந்துள்ளதாக கூறி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இந்த நிலையில் கிழங்கு இறக்குமதிக்கு 20 ரூபா வரி இடப்பட்டுள்ளது. உள்நாட்டு விவசாயிகளை பாதுகாக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)


# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.01.2011 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது அன்புப் தெய்வம்
அமரர் தங்கராசா ஜெயானந்தன்
அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 24.02.2011
இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில்
எமதுஇல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம்
தாங்களும்வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஸ்ரீ வாகீஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(சி-2529)



# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.01.2010 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.


| தொடர் இல | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையும், மானிப்பாய் சேவைநிலையமும், நாவலர்வீதி சேவைநிலையமும் | 13.03.2011 மு.ப 8.30 | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 2 | காங்கேசன்துறைக்கிளையும், மல்லாகம் சேவைநிலையமும் | | |
| 3 | யாழ்.பிரதான வீதிக்கிளையும், உரும்பிராய் சேவைநிலையமும், | | |
| 4 | நெல்லியடி | | |
| 5 | அச்சுவேலி | | |
| 6 | சங்கானைக்கிளையும், பண்டத்தரிப்பு சேவைநிலையமும் | | |
| 7 | சுன்னாகக்கிளையும், கோப்பாய் சேவைநிலையமும் | | |
| 8 | சாவகச்சேரிக்கிளையும், கொடிகாமம் சேவைநிலையமும் | | |
| 9 | வல்வெட்டித்துறை | | |
| 10 | யாழ். பல்கலைக்கழககிளையும், திருநெல்வேலி சேவைநிலையமும், கல்வியங்காடு சேவைநிலையமும் | | |
| 11 | யாழ்.கன்னாதிட்டிக்கிளையும், இணுவில் சேவைநிலையமும் | | |
| 12 | பருத்தித்துறைக்கிளையும், புலோலி சேவைநிலையமும் | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
2011.02.24

(சி-2527)

# இதய மாற்றுச் சத்திரசிகிச்சையில் சாதனை படைத்த வைத்திய நிபுணர்



தமிழர்களாகிய நாம் எல்லோருமே பெருமைப்படக்கூடிய சம்பவமொன்று இந்தப்புத்தாண்டின் ஆரம்பத்தில் கண்டி வைத்தியசாலையின் இதய மாற்று சத்திரசிகிச்சை நிலையத்தில் நடந்துள்ளது. இலங்கை வரலாற்றிலேயே முதல்தடவையாக இச்சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது. சாதாரணமாக நோயாளியை முழுமையானநிலையில் நினைவிழக்கச் செய்தபின்பே இதயத்தைத் திறந்து அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட உடலபாகத்தை மட்டுமே (மார்புப் பகுதி) விறைக்கச் செய்து மேற்படி சத்திரசிகிச்சை செய்ததன் வாயிலாக இச்சாதனை புரியப்பட்டுள்ளது.

இச்சாதனையை நிகழ்த்தியவர் நாற்பதே வயதான இளம் இதய மாற்று சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் காந்திஜி அவர்கள். பண்ணாகம் சுழிபுரத்தைச்சேர்ந்த புகழ்பூத்த ஆங்கில ஆசிரியரான திரு ஞானச்சந்திர மூர்த்தியின் மகனும் பெண்நோயியல் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் பவானியின் சகோதரருமான இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் மற்றும் யாழ் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் தொடர்ந்தார். க.பொ.த. சாதாரண தரத்தில் மிகச்சிறந்த சித்தியெய்தி தனது மருத்துவக் கல்வியினைப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டார். சத்திரசிகிச்சை நிபுணராக வரவேண்டும் என்ற தனது கனவை இதய மாற்று சத்திரசிகிச்சையில் மேற்படிப்பைத் தொடர்ந்ததன் மூலம் நிறைவேற்றிக் கொண்டார். யாழ் போதனா வைத்தியசாலையில் இச் சத்திரசிகிச்சைப் பிரிவு இல்லாத பட்சத்தில் மேற்படி கண்டி வைத்தியசாலையில் தனது பணியை ஆரம்பித்தார்.

நூற்றுக்கணக்கான இதய சத்திரசிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்ட இவருடன் மேற்படி சாதனை தொடர்பாகக் கலந்துரையாடினேன். அவ்விபரங்களை நேயர்களுடன் பகிர்ந்து கொள்வதில் தமிழன் என்ற வகையில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.


**கேள்வி :** இதய சத்திர சிகிச்சை பற்றிச் சற்று விளக்குவீர்களா?

**பதில் :** பொதுவாக இதய அறுவைச்சிகிச்சை பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். நோயுற்ற அல்லது அடைப்புள்ள முடியுரு நாடிகளைக் கடந்து, புதிய குருதிச்சுற்றோட்டத்தை ஏற்படுத்தல். இதனையே "பைபாஸ்" (bypass) சத்திரசிகிச்சை என்பர். இதற்காக உள்முலை நாடி, ஆரை நாடி அல்லது காலிலுள்ள நாளம் பயன்படுத்தப்படுகிறது. இதன்போது இதயத் தசைகள் வெட்டப்படுவதில்லை.

ஆனால், வால்வுகள் மாற்றப்படும் போது இதயம் வெட்டித் திறக்கப்பட்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும். இச் சத்திரசிகிச்சைகள் இதயம் இயங்கிக் கொண்டிருக்கையிலும் (off-pump) இதயத்தினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தும் (on-pump) என சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்படுகிறது.

On-pump முறையில் இதய சுவாச இயந்திரத்துடன் இணைக்கப்பட்டவரின் இதயத்தினைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு இதயத்திற்கு பொற்றாசியம் கரைசல் செலுத்தப்படும். மேலும், ஐஸ் கட்டிகளினால் இதயத்தசைகள் குளிராக்கப்படும். சத்திர சிகிச்சை முடியும் வரை மனித இதயத்திற்குப்பதில் இயந்திரமே செயற்படுகிறது. சத்திரசிகிச்சை முடிவுற்றதும், செலுத்தப்பட்ட பொற்றாசியம் கரைசலைக் கழுவி அகற்றுவதன் மூலம் இதயம் படிப்படியாகத் துடிக்க ஆரம்பிக்கும். பின்னர் இயந்திரத்தின் பங்களிப்பும் படிப்படியாகக் குறைக்கப்படும். இறுதியாக கறையில் உருக்குக் கம்பிகளின் உதவியுடன் வெட்டித் திறக்கப்பட்ட மார்பானது மூடப்படும்.

off-pump முறையில் சத்திர சிகிச்சை



மேற்கொள்வது சற்று கடினமானது. இதன்போது "ஒக்ரொபஸ்" எனும் கருவி மூலம் இதயத்தின் குறித்த ஒரு பகுதியினை மட்டும் இயங்காது செய்து ஏனைய பகுதிகள் இயங்கிக் கொண்டிருக்கையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும். எம்முறையாயினும் நோயாளியை முழுவதுமாக மயக்கியே (General Anesthesia) மேற்கொள்ளப்படுகிறது.

**கேள்வி :** நீங்கள் மேற்கொண்ட புதிய முயற்சிபற்றி?

## "பைபாஸ்" சத்திரசிகிச்சை குறித்து வைத்திய நிபுணரின் விசேட பேட்டி

**பதில் :** இது இலங்கையைப் பொறுத்தவரையிலேயே புதிய முயற்சி எனலாம். ஆனால் 2000ஆம் ஆண்டுமுதல் வளர்ந்த மேற்குலக நாடுகளிலும், 2005 தொடக்கம் இந்தியாவில் முன்னேற்றகரமான இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கேள்வி :** இப்புதிய முயற்சி ஏற்கெனவே இருந்துவந்த நடைமுறையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

**பதில் :** நோயாளியை முழுநிலையில் மயக்கியபின்பே இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுவது நீங்கள் அறிந்ததே. இங்கு, எமக்குத் தேவையான பகுதி மட்டுமே விறைப்படையச் செய்யப்படுகிறது. மகப்பேற்று அறுவை சிகிச்சையின்போது முள்ளந்தண்டில் epidural anesthesia கொடுப்பதன் மூலம் குறித்த பகுதியை மட்டும் விறைக்கச் செய்து அறுவை சிகிச்சைமூலம் குழந்தை பெறுவிப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள், அந்தமுறையை ஒத்ததே இது.

**கேள்வி :** இதன்மூலம் கிடைக்கும் நன்மைகளாக நீங்கள் கருதுபவை யாவை?

**பதில் :** நன்மைகள் மிக மிக அதிகம். நோயாளியைப் பொறுத்தமட்டில் இதனை "நோவில்லாத சத்திரசிகிச்சை" என்றே நான் குறிப்பிடுவேன். சத்திர சிகிச்சை முடிந்ததும் cannula தொடர்ந்தும் இருக்கும். தேவையான காலத்திற்கு local anesthesia வினைச் செலுத்துவதன் மூலம் நோவின்றிப் பேணிக் கொள்ளலாம்.

மேலும், சத்திரசிகிச்சைக்கு முன் குடிதண்ணீருமின்றிப் பட்டிணி கிடக்கத் தேவையில்லை. சத்திரசிகிச்சை முடிந்து சிறிது நேரத்திலேயே பிஸ்கட் சாப்பிட முடியும், குளிர்பாணம் அருந்த முடியும்.

முழுநிலை மயக்கத்தில் செய்வது போன்று intubation செய்ய அவசியமில்லாதபடியால், சுவாசக்குழாய் பாதிப்பால் குருதிவெளியேறுவதோ, சுவாசத் தொற்றோ ஏற்பட வாய்ப்பில்லை.

முழுநிலை மயக்கத்தில் ஏற்படும் பாதிப்புகளான களைப்பு, குழப்பநிலை, தலையிடி, ஓங்காளம் போன்றன ஏற்பட வாய்ப்பில்லை.

அத்துடன் ஈரல் மற்றும் சிறுநீரக பாதிப்புகளும் தவிர்க்கப்படும். முக்கியமாக, மூன்றே நாட்களில் வீடுசெல்ல முடியும். வைத்தியசாலையினைப் பொறுத்தமட்டில், அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் நோயாளி தங்க வேண்டிய காலமும் குறைவதால், சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளிகள் அதிககாலம் (waiting list) காத்திருக்க வேண்டிய தேவையில்லை.



மேலும், நடைமுறையிலுள்ள முறையுடன் ஒப்பிடும்போது செலவு குறைவானது.

**கேள்வி :** இந்தமுறையில் ஏதாவது பாதிப்புகள் உள்ளதாகக் கருதுகிறீர்களா?

**பதில் :** இல்லையென்றே சொல்லலாம். ஆனாலும், நோயாளிக்கு முற்கூட்டியே நன்கு விளங்கப்படுத்தப்படல் வேண்டும். தான் விளித்திருக்கையில் தனது இதயத்தில் அறுவை சிகிச்சை நடைபெறுவதை அவர் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

**கேள்வி :** இப் புதியமுயற்சி பற்றி ஊடகங்களின் பார்வை எப்படியிருந்தது?

**பதில் :** மிகுந்த வரவேற்பினைப் பெற்றிருந்தது. தொலைக்காட்சியில் எனது பேட்டி ஒளிபரப்பாகியது. டெயிலிநியூஸ், லக்பிம, தினமின மற்றும் சண்டேரைம்ஸ் போன்றன என்னைப் பேட்டி கண்டு எழுதியிருந்தன.

**கேள்வி :** வேறு ஏதாவது கூற விரும்புகிறீர்கள்?

**பதில் :** இந்தச் சந்தர்ப்பத்திலே என்னுடன் இம்முயற்சியில் தோளோடு தோள்நின்ற மயக்கமருந்து நிபுணர் வைத்தியக்கலாநிதி உடுவல அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பல்வேறு நன்மைகளைக் கொண்ட, இம் முறையினையே எமது வழமையான நடைமுறையாகக் கொண்டுவர உள்ளோம்.

இவரது பணிகள் மேலும் தொடர இறையருளை வேண்டிநிற்பதோடு, நாம் சிறிது சிந்திக்கத் தலைப்பட வேண்டும்.

இப்படியான திறமைசாலிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள். எமது இளம் சமுதாயம் இவர்களை முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும். மூளைசாலிகளும் திறமைசாலிகளும் எமது பிரதேசத்தை விட்டு வெளியேறுவது எமது துரதிஸ்டமே. ஆனாலும் தமிழனின் திறமை எங்குவெளிப்பட்டாலும் உலகம் அவர்களைத் திரும்பிப் பார்க்கும் பொழுது பெருமை எம் இனத்திற்கே. இதுவரை காலமும் உணர்வுபூர்வமாகவே சிந்தித்துவந்த நாம், இனியாவது சிறிது புத்திபூர்வமாகச்சிந்தித்து செயற்படுவோமாக.

செவ்வி : வைத்தியகலாநிதி
எஸ்.கண்ணதாசன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மருத்துவபீடம், யாழ்ப்பாணம்

# குடும்ப பொருளாதார மேம்பாட்டுத்திட்டம் மூலம் 10 இலட்சம் குடும்பங்களுக்கு திவிநெகும கொடுப்பனவு

(கொழும்பு)

குடும்பப்பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் முதற்கட்டமாக பத்து இலட்சம் குடும்பங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற திவிநெகும கருத்திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன் மூலம் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் நன்மையடையும் என அவர் தெரிவித்தார்.

சகல கிராம சேவகர் பிரிவிலிருந்தும் தலா நூறு குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்று வருட திட்டமாக திவிநெகும கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 10 இலட்சம் குடும்பங்களை உள்ளடக்கியதாக திவிநெகும கருத்திட்டம் நாடாளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 18 அமைச்சர்கள் இணைந்து இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதுடன் இதற்கான நிதியினை திறைசேரி நேரடியாக வழங்கவுள்ளது. திவி நெகும குடும்ப பொருளாதாரக் கருத் திட்டத்தில் நான்கு அதிகாரிகளுக்கு நூறு குடும்பம் என்ற வகையில் குடும்பங்கள் ஒப்படைக்கப்படவுள்ளன. அங்கு குடும்பங்களின் சகல தரவுகளையும் அவ்வதிகாரிகள் திரட்டி அவற்றின் வருமானம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான விடயங்களை அவர்கள் கவனத்திற்கொள்வர்.

அக்குடும்பங்களின் ஜீவனோபாயம், தொழில்துறை, தொழில் தொடர்பான இதர சகல விடயங்களிலும் அவ்வதிகாரிகள் உதவுவர் .இதற்கு மேலாக மாவட்ட மற்றும் மாகாண ரீதியிலும் இதனை மேற்பார்வை செய்ய உதவிச் செயலாளர்கள் தரத்திலான உயரதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

ஒவ்வொரு நூறு குடும்பங்களுக்கும் ஒரு கிராம சேவகர், சமுர்த்தி அதிகாரி, விவசாய ஆராய்ச்சி அதிகாரி, குடும்பசுகாதார அதிகாரியென நான்குபேர் நியமிக்கப்படுவர்.

அக்கிராமத்திலிருந்தே இந்த நால்வரும் நியமிக்கப்படுவதுடன் குடும்ப போஷாக்கு நிலை, உணவுப் பாதுகாப்பு, வாழ்க்கைச் செலவு ஆகியவற்றில் இவர்கள் கவனம் செலுத்துவர். அத்துடன் அக்குடும்பங்களின் மேலதிக வருமானங்கள் தொடர்பிலும் அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

விவசாயத்துறையில் ஈடுபடுபவர்களெனில் விதை உரம் விவசாயத்திற்கான உபகரணங்கள் உட்பட சகல உதவிகளையும் அக்குடும்பங்களுக்குப் பெற்றுக்கொடுப்பதில் அவ்வதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுவர். ஏற்கனவே நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் திட்டத்தைப் போன்று அதனை விட அதிகமான நன்மைகளை மக்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் பிரதியமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 1 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் வி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(ஸ்ரீ-3-29)

★ ★ ★


(யாழ்ப்பாணம்)

யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கெ. அன்ரன் மரியதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் சி.நாகையா, சிறப்பு விருந்தினராக யா/ நவாலி மகா வித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஆனைக்கோட்டை சமுர்த்தி உத்தியோகத்தர் பொ.சுசிதரன், உயரப் புலம் ஜே/132 கிராம அலுவலர் ச.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-9)

# வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு தலைவராக அமிர்தலிங்கம் நியமனம்



வடக்கு- கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளராகவும் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளராகவும் கடமையாற்றிய எஸ். அமிர்தலிங்கம் வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராக இருந்த எஸ். பரமலிங்கம் ஓய்வு பெற்றதையடுத்தே இவருக்கான நியமனம் வழங்கப்பட்டது.

இவருக்கான நியமனப் பத்திரத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நேற்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். நூலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கியுள்ளார்.

அத்துடன் பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கான நியமனப் பத்திரமும் ஆளுநரினால் அன்றைய தினம் வழங்கப்பட்டது. இதில் ஆர். தர்மகுலசிங்கம், ஏ.என்.அமனுல்லா, டபிள்யூ.பி.ஆர். பியசேன ஆகியோர் நியமனப்பத்திரத்தை பெற்றுக்கொண்டனர். (ஸ்ரீ-2)

# இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு இலவச போக்குவரத்து வசதிகள்

(கொழும்பு)

வன்னி மாவட்டத்தில் இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்ல இலவசப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இதற்காக 400இற்கும் மேற்பட்ட பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தலைமையில் கட்சித் தலைவர்கள் செயலாளர்களுடனான முக்கிய கூட்டம் ஒன்று தேர்தல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாகஇலவசப் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்யவும் இதற்கு ஏற்ப 400க்கும் மேற்பட்ட பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# வாழை நாரினாலான உற்பத்திப் பொருட்களை உருவாக்கலுக்கான பயிற்சிப்பட்டறை

யாழ்.மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அமுலாக்கத்தில் வாழைநார் மூலம் வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள், அலங்காரக் கைப்பணிப் பொருட்கள் போன்ற பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்களை உருவாக்கலுக்கான பயிற்சிப் பட்டறையொன்று எதிர்வரும் மார்ச் மாதம் நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சியானது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் இந்தியத் துறைசார்ந்த வளவியலாளர்களால் நான்கு நாட்கள் கொண்ட பயிற்சிப் ப ட்டறையாக நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் தமது பெயர் விபரங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதிக்கு முன் மாவட்ட காரியாலயம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபை கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பதிவினை மேற்கொள்ளுமாறு இச்சபையின் பதில் பிரதிப் பணிப்பாளர் எஸ். சிவகங்காதரன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையில் மூவரை கொலை செய்ததாக நோர்வேயில் தமிழர் ஒருவர் கைது

நோர்வேயில் உள்ள ஈழத்தமிழ் ஒருவர் இலங்கையில் மூன்று பேரை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் மூன்று பேரை கொலை செய்ததாக 34 வயதுடைய இவர் மீது குற்றச்சாட்டப்பட்டு கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டார்.

இவர் கடந்த 2004ஆம் ஆண்டு இலங்கையில் பொலிஸ் அதிகாரி ஒருவரையும் கடந்த 2006ஆம் ஆண்டு மே மாதம் அளவில் எதிரணி தமிழ் குழுக்களைச் சேர்ந்த இரண்டு பேரையும் கொலை செய்தமை தொடர்பிலேயே குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் ஒப்பந்த அடிப்படையிலேயே இவர் கொலைகளை புரிந்திருப்பதாக நோர்வே குற்றப்பிரிவு பொலிஸார் சட்டத்தரணி பெர்ஸிம்மர் தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தேக நபர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் ஏதேனும் பொறுப்பை வகித்தாரா என்பது குறித்து விசாரணைகளை முன்னெடுத்துவருவதாக சட்டத்தரணி தெரிவித்துள்ளார். எனினும் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டுள்ள அவர் நாடு கடத்தப்படமாட்டா என சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)



கிளிநொச்சியில் உள்ள பொன்நகரில் நேற்று முன்தினம் மக்கள் குடியேற்றப்பட்டு 20 வீடுகள் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், மேஜர் ஜெனரல் நந்தன உடவந்தன ஆகியோர் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும், ஆளுநர் குடும்பத் தலைவி ஒருவருக்கு வீட்டிற்கான காணி உறுதியை கையளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# நாட்டை விட்டு ஓடினேனா? கடாபி திட்டவட்ட மறுப்பு



லிபியாவில் எதிர்ப்பாளர்கள் மீது நேற்று முன்தினமும் போர் விமானங்கள் மூலம் குண்டு வீசித் தாக்குதல் நடந்தது. இந்நிலையில் லிபிய ஜனாதிபதி கடாபி நாட்டை விட்டு ஓடி விட்டதாக வெளிவந்த செய்தியை மறுக்கும் விதத்தில் நேற்று முன்தினம் திடீர் பேட்டியளித்த கடாபி, நான் டிரிபோலியில் தான் உள்ளேன். நாய் போன்று அலையும் தொலைக் காட்சிகளின் செய்திகளை நம்ப வேண்டாம் என்று கூறியுள்ளார். லிபியாவின் பல நகரங்களில் கடாபி மீதான எதிர்ப்புப் போராட்டங்கள் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளன. தலைநகர் டிரிபோலி, கிழக்கு நகரமான பெங்காசி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை டிரிபோலியில் உள்ள பொதுமக்கள் காங்கிரஸ் எனப்படும் லிபிய பாராளுமன்றம் தீக்கிரையாக்கப்பட்டது. பல நகரங்களில் அரசு அலுவலகங்களுக்கும் இதே கதி ஏற்பட்டது.

### போர் விமானம் மூலம் தாக்குதல்

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை டிரிபோலியின் புறநகர்ப் பகுதியான பசுலும் மற்றும் டஜூரா மாவட்டங்களில் வீதிகளில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மக்கள் மீது போர் விமானங்களும் இராணுவ ஹெலிகொப்டர்களும் சரமாரியாகக் குண்டு வீசிக் கொன்றன. கடாபியின் ஆதரவாளர்களும் கண்ணில் பட்டவர்களை எல்லாம் சுட்டுத் தள்ளினர். இச்சம்பவத்தில் 61 பேர் பலியானதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒன்பது நாள் போராட்டத்தில் இதுவரை 400 க்கும் அதிகமானோர் பலியாகியிருக்கக் கூடும் என்று மனித உரிமை அமைப்புகள் கூறியுள்ளன.

டிரிபோலியில் நேற்று முன்தினம் போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தகவலை இந்தியாவுக்கான லிபியா தூதராக இருந்து தற்போது இராஜினாமா செய்து விட்ட அலி எல் எஸ்ஸாவி உறுதிப்படுத்தினார். மேலும் துப்பாக்கிச் சூடு, ஆபிரிக்கக் கூலிப் படையினரைப் பயன்படுத்தல் ஆகியவற்றின் மூலம் லிபியா அரசு தனது மக்களைக் கொன்று வருவதாகத் தெரிவித்தார்.

அதேபோல ஐ.நா. வுக்கான லிபியா தூதர் இப்ராகிம் டப்பாசியும், லிபியாவில் மனிதப் படுகொலையை ஆரம்பித்து விட்டார் கடாபி என்று கூறினார். ஆனால் கடாபியின் மகன் சயீப் அல் இஸ்லாம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், பயங்கரவாதிகளின் ஆயுதக் கிடங்குகளைத்தான் போர் விமானங்கள் தாக்கின. குடியிருப்புகள் மீது தாக்குதல் நடக்கவில்லை. அதேபோல் டிரிபோலியிலும் பெங்காசியிலும் விமானத் தாக்குதல் நடக்கவில்லை என்று மறுத்தார்.

பெங்காசி நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது விமானத் தாக்குதல் நடத்தும்படி இரு விமானப் படைத் தளபதிகளுக்கு இராணுவம் உத்தரவிட்டது. அதேநேரம் பெங்காசி விமானப் படைத்தளத்தை மக்களும் கைப்பற்றிக் கொண்டதால் வேறு வழியின்றி அந்த இரு விமானப் படைத் தளபதிகளும் ஒரு போர் விமானத்தில் ஏறி மக்கள் மீது தாக்குதல் நடத்த விரும்பாமல் மத்திய தரைக் கடலில் அமைந்துள்ள தீவு நாடான மால்டாவில் தரையிறங்கினர். அங்கிருந்த பொலிஸார் அவர்களைக் கைது செய்து விசாரித்த போது இத்தகவல் வெளியானது. இதன் மூலம் சயீப்பின் மறுப்பு பொய் என்பது தெரியவந்துள்ளது.

### கடாபி காட்டம்

இந்நிலையில் லிபியா தலைவர் முவம்மர் கடாபி வெனிசுலா நாட்டுக்கு ஓடிப் போய் விட்டதாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சர்



வில்லியம் ஹாக் கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார். இதையே சீனாவுக்கான லிபியாவின் துணைத் தூதர் முஸ்ரதியும் தெரிவித்திருந்தார். ஆனால் நேற்று முன்தினம் டிரிபோலியில் உள்ள தனது வீட்டின் முன் ஒரு வானில் உட்கார்ந்தபடி அரசு ரீ.விக்குத் திடீர் பேட்டி கொடுத்த கடாபி, நான் இன்னும் டிரிபோலியில் தான் இருக்கிறேன். நாய் போலத் திரியும் ரீ.வி செய்திகளை நம்ப வேண்டாம் என்று மறுப்பு தெரிவித்தார். பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள வெனிசுலா தூதரகமும் இதை மறுத்துள்ளது.


### பெங்காசி வீழ்ந்தது.

லிபியாவின் கிழக்கு நகரமான பெங்காசி தற்போது மக்களின் கைகளுக்கு வந்து விட்டதாகவும் அங்கிருந்த இராணுவப் படைத் தளங்களை மக்கள் கைப்பற்றி விட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இதை உறுதிப்படுத்தும் விதத்தில் பெங்காசியில் உள்ள விமான ஓடுதளம் மக்களால் சேதப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் அங்கு விமானங்கள் இறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோல் டிரிபோலியில் உள்ள விமான நிலையமும் இழுத்து மூடப்பட்டு விட்டது. இதனால் லிபியாவில் உள்ள இந்தியர் உள்ளிட்ட வெளிநாட்டவர்களின் மீட்பில் சிரமம் ஏற்பட்டுள்ளது. சிட்ரே டொப்ருக் மிஸ்ரட்டா ,கோம்ஸ் , டர்கவுனா , ஜென்டன் ,அல்ஜாவியா மற்றும் ஜவாரா ஆகிய நகரங்களையும் மக்கள் கைப்பற்றி விட்டனர். எகிப்து –லிபியா எல்லையில் இருந்த லிபிய இராணு வீரர்கள் அங்கிருந்து சென்று விட்டதால் எகிப்து எல்லையில் அந்நாட்டு இராணுவம் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது.

### கடாபி மீது விசாரணை

லிபியாவில் நடந்த படுகொலைகள் குறித்த சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. வின் மனித உரிமைப் பிரிவுத் தலைவர் நவநீதம்பிள்ளை கூறியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை யில், மனித இனத்திற்கு எதிரான குற்றத்தில் லிபிய அரசு ஈடுபட்டுள்ளது. இது குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். மக்கள் மீது இயந்திரத் துப்பாக்கிகள், போர் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்துவதை லிபிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



டிஸ்கவரி விண்கலம் தனது கடைசிப் பயணத்தினை இன்று வியாழக்கிழமை மேற்கொள்கிறது. இதற்காக அமெரிக்காவில் புளோரிடா மாகாணத்தில் விண்வெளி ஆய்வு மையத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. கடற்கரை பகுதி என்பதால் கப்பற்படையினர் ரோந்து நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

# நியூசிலாந்தில் பயங்கர பூகம்பம்; 65 இற்கும் மேற்பட்டோர் பலி

## இடிபாடுகளில் சிக்கி பலர் தவிப்பு



நியூசிலாந்தில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் தொன்மையான கட்டடங்களுக்குப் புகழ் பெற்ற கிறிஸ்ட் சர்ச் நகரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.


இந்நிலநடுக்கத்தில் இடிபாடுகளுக்கிடையில் சிக்கி 65 பேர் பலியாகியுள்ளனர். பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

அவுஸ்திரேலியா அருகில் உள்ள நியூசிலாந்து நாட்டின் தென்பகுதியில் நேற்று முன்தினம் நண்பகலில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.3 புள்ளிகள் பதிவான இந்நிலநடுக்கத்தில் தென் பகுதியின் முக்கிய நகரமான கிறிஸ்ட் சர்ச் நகரம் பெரிதும் சேதம் அடைந்தது.

அந்நகரில் உள்ள பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன. தொலைபேசி மற்றும் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டது. கிறிஸ்ட் சர்ச் விமான நிலையம் மூடப்பட்டது. அங்கிருந்த மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்தவர்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டனர். தண்ணீர்க் குழாய்கள் உடைந்ததால் பல வீதிகள் வெள்ளத்தில் மிதந்தன. இந்நில நடுக்கத்தில் இடிபாடுகளுக்கிடையில் சிக்கி 65 பேர் பலியாகியுள்ளனர். பலர் காணாமல் போய்விட்டனர். எனினும் இடிபாடுகளுக்கிடை யில் பலர் சிக்கியிருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

கிறிஸ்ட் சர்ச் மேயர் கூறுகையில்,

பல கட்டடங்கள் தரை மட்டமானதால் அதில் சிக்கி இறந்தவர்களைக் கண்டறிய தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார். தொடர்ந்து அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டுக் கொண்டே இருந்ததால் பல கட்டடங்கள் இடிந்து விழுந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்தாண்டு செப்டெம்பர் மாதம் இந் நகரில் 7.1 புள்ளியளவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்துக்குப் பின் மிக அதிகளவில் தற்போது ஏற்பட்டிருக்கிறது. (ஸ்ரீ-2)



ஜப்பான் சென்றிருந்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலிசர்தாரி (இடது) , அந்நாட்டு பிரதமர் நௌட்டோகானை தலைநகர் டோக்கியோ பிரதமர் அலுவலக இல்லத்தில் வைத்து சந்தித்து கைலாகு வழங்குவதை படத்தில் காணலாம்.

ஒரு சிறந்த கல்விச்சாலை;
ஒரு சிறைச்சாலையை மூடுகிறது.
—லா புருயர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மாணவர்களை பழுதாக்கும் 'மனித உரிமைகள்' விவகாரம்

நிலத்தின் தன்மை பயிர்க்குலதாகுமாம் என்று பாரதி கூறினார். நிலத்தின் தன்மை அந்த நிலத்தில் விளையும் பயிருக்கு உள்ளது போல் தாயின் இயல்பு பிள்ளைக்கு உரியதாகும். இது பாரதியின் முடிபு மட்டுமல்ல; விஞ்ஞான உலகமும் இதனை நிராகரிக்கவில்லை என்பதை சொல்லித்தான் ஆகவேண்டும்.

நிலம்–பயிர், தாய்–பிள்ளை இவற்றின் வேறுபட்ட இயல்புகள் போல நாட்டுக்கு நாடு தேசத்திற்கு தேசம் பிரதேசத்திற்கு பிரதேசம் ஊருக்கு ஊர் என மக்கள் சமூகத்திடமும் வேறுபட்ட தன்மைகள் இருக்கும் என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

அந்தவகையில் இலங்கை மக்களின் இயல்பும் பண்பாடும் பழக்க வழக்கமும் வாழ்க்கைமுறையும் லண்டனின் வாழ்க்கை முறையோடு ஒத்ததல்ல. எனவே இரண்டு நாட்டு மக்களின் வாழ்வியல் கோலங்கள் ஒப்பிடுவதற்கு உரியதன்று.

இருப்பினும் மனித உரிமை–சிறுவர் உரிமைகள் என்ற விவகாரத்தில் சில விடயங்கள் குறித்து ஆராய வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

குறிப்பாக இலங்கையில் எங்கள் தமிழ்மக்களின் வாழ்வியல் என்பது பௌத்திரமானது. மற்றவர்கள் விரும்பக்கூடியது; கோடுபோட்டு வாழும் அறநெறி சார்ந்தது. சமகாலத்தில் அந்த வழிமுறைகளில் புரள்வு களும் தேய்வுகளும் இருந்தாலும் எங்கள் ஒட்டுமொத்த வாழ்வில் நம் கலாசாரத்தை தொலைக்கவோ பண்பாட்டை சிதைக்கவோ நாங்கள் தயார் இல்லை என்ற உண்மையை எவரும் உதாசீனம் செய்யக் கூடாது.

மனித உரிமைகள்–சிறுவர் உரிமைகள் என்பதை நாம் இருகரம் கூப்பி வரவேற்கிறோம்; ஆதரிக்கிறோம். அந்த உரிமை நிலைநாட்டப்பட வேண்டிய தளங்கள் இலங்கையில் தாராளமாக உண்டு என்பதற்கும் எங்கள் பூரண ஆதரவு உண்டு.

ஆனால் எங்கள் மாணவர்கள் விடயத்தில் சில மனித உரிமைகள்–சில சிறுவர் உரிமைகள் அவர்களை பழுதாக்குவதில் அல்லது அவர்களை ஒழுங்கு படுத்துவதில் ஊறு விளைவிக்கின்றன என்பதை யதார்த்தத்தில் காணமுடிகிறது.

பாடசாலை மாணவர் ஒருவரின் கற்றல் செயல்பாடுகளுக்காக–அவனை வழிப்படுத்துவதற்காக–அவனின் எதிர்கால நன்மைக்காக–பாடசாலையின் பொதுவான ஒழுக்கக்கட்டுப்பாட்டுக்காக ஆசிரியரோ அல்லது அதிபரோ மாணவரை அதட்டுகிறார். அந்த அதட்டலின் நோக்கம் மர்ணவர்களை நல்வழிப்படுத்துவதாகும்.

இருந்தும் அந்த அதட்டல் மனித உரிமைகளின் முன் நாணிக்கோணி அவமானப்படுத்தப்படுகின்றது.

இதனால் ஆசிரியர்கள் ஏதோ நாம் கடமையை செய்துவிட்டால் போதுமென அமைதி கொள்கின்றனர்.

மாறாக மாணவர்களோ அதிபர், ஆசிரியர்கள் எங்களை எதுவும் செய்துவிட முடியாது என திமிர் காட்டுகின்றனர். இந்தத் திமிர் எடுப்பு எத்தனையோ மாணவர்களுக்கு பொருந்தவே பெருந்தாது.

இது சில மாணவர்களுக்கே பொருந்துவதாகும். இருந்தும் குறித்த சில மாணவர்களின் அசமந்தப் போக்கு ஒட்டுமொத்த மாணவர்களின் கற்றலை–எதிர்கால நலனை மிக மோசமாகப் பாதிக்கிறது.

அத்துடன் அதிபர், ஆசிரியர்கள் 'நமக்கேன் வீண்வம்பு' என்று நினைத்துக்கொண்டு மாணவர்களின் குழப்பங்களை கண்டும்காணாமல் போகும் பழக்கத்தை ஒழுக்கமாக கடைப்பிடிக்கின்றனர்.

எனவே மனித உரிமைகள்–சிறுவர் உரிமைகள் தேவையானவை. அதற்காக அவை மாணவர்கள் தவறான பாதைக்கு போவதற்கு ஊக்கமளிக்கக் கூடாது.

மனித உரிமைகள் தனித்து மாணவர்களுக்கு மட்டுமல்ல; அவை ஆசிரியர்களுக்கும் உரியவை என்பதை உரியவர்கள் உணரக்கடவர்.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு த.தே.ம.மு. கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பார்வதி அம்மாளுக்கு அஞ்சலி செலுத்த புறப்பட்ட வேளை பொலிஸாரால் தடுக்கப்பட்டனர்.

இத்தகைய அடக்குமுறையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே கட்சிப் பிரதிநிதிகளால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாளின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துவதற்கு புறப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸாரால் தடுக்கப்பட்டனர்.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவி வந்த பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டு, ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டதாக கூறும் அரசு மரணச் சடங்கில் கலந்து கொள்ளச் செல்பவர்களை ஏன் தடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை பார்வதியம்மாளின் மரணச் சடங்கினை தாமே முன்னின்று நடத்துவதாக அரசு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஜனநாயக ரீதியில் ஆட்சி நடப்பதாக கூறும் அரசினர், மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்குக்கூட தடை விதிப்பதன்மூலம்சாதிக்கநினைப்பதுஎன்னவென அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எ-6)

# ஐரோ.நாடாளுமன்றக் குழு வவுனியாவுக்கு விஜயம்

தெற்காசியாவிற்கான ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழுபேர் அடங்கிய குழுவினர் நேற்று புதன்கிழமை வவுனியாவிற்கு விஜயம் செய்தனர்.

இந்நிலையில் அரச அதிபரை சந்தித்த அவர்கள் மாவட்ட நிலைவரங்கள் குறித்து கேட்டறிந்தனர்.

அத்துடன் இடம்பெயர்ந்த மக்களுடைய மீள்குடியேற்றம், தடுப்பு நிலையங்களில் இருந்த போராளிகளுடைய புனர்வாழ்வு மற்றும் அண்மையில் பெய்த பெருமழையினால் வவுனியாவில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தொடர்பில் குறித்த குழுவினருக்கு அரசாங்க அதிபரினால் விளக்கமளிக்கப்பட்டது.

பின்னர் மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்த இவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் இயங்கிவரும் சத்திரசிகிச்சை கூடத்தையும் பார்வையிட்டனர்.

அத்துடன் வன்னியில் நடைபெற்ற மனிதாபிமான நடவடிக்கையின்போது இடம் பெயர்ந்து வந்தவர்களால் இன்னமும் சொந்த இடங்களுக்கு திரும்பமுடியாது செட்டிக்குளம் கதிர்காமர் நிவாரண கிராமத்தில் தங்கியுள்ள மக்களையும் இதன்போது இவர்கள் சந்தித்தமை குறிப்பிடத் தக்கது. (எ-5)

# தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் அதிகமானோர் அப்பாவிகள்

## ஆசிய மனித உரிமை கவுன்சில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பயங்கரவாத குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் அப்பாவிகள் என்பதாக ஆசிய மனித உரிமைக் கவுன்சில் வலியுறுத்துகின்றது.

அதற்கு எடுத்துக்காட்டாக மாத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த முப்பது மாதங்களாக அநியாயமாக விளக்கமறியலில் அடைக்கப்பட்டிருக்கும் சம்பவத்தை ஆசிய மனித உரிமைக் கவுன்சில் சுட்டிக் காட்டுகின்றது.

சுரன்ஜித் கிரிசாந்த் பெர்ணான்டோ எனும் பெயருடைய பிரஸ்தாப வாலிபன் கண்டி குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கடந்த 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆயினும் அவர் மீது குற்றப் பத்திரிகை இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை. அதன் காரணமாக அவருக்கும் தன் குற்றமற்ற தன்மையை நிரூபிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை.

பயங்கரவாதக் குற்றச்செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஏனைய இளைஞர்களின் நிலையும் அதுதான் என்று குறிப்பிட்டுள்ள மனித உரிமை கவுன்சிலானது இவ்வாறான செயற்பாடுகள் நாட்டின் சட்டத்துறை மீதான நம்பகத் தன்மையைக் குலைத்து விடுவதாக சுட்டிக் காட்டுகின்றது.

அத்துடன் இவ்விடயம் தொடர்பாக பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர், பொலிஸ் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றிற்கும் முறைப்பாடுகளை ஆசிய மனித உரிமைக் கவுன்சில் அனுப்பி வைத்துள்ளது. (ச-5)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட் பட்ட யா/வீமன்காமம் மகா வித்தியாலயம், தரம் 1 C பாடசாலைக்கு 21.01.2011-ம் திகதியிலிருந்து அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இதற்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1,2-I, 2-II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்துவிண்ணப்பங்கள்கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.

மாதிரி விண்ணப்ப படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை 04.03.2011 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (எ)

* * *

வலிகாமம் கல்வி வலயத்திற்கு யா/சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலைக்கு (தரம் II பாடசாலை) 23.02.2011 ஆம் திகதியிலிருந்து அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1,2-I,2-II (பட்டதாரி ஆசிரியர்) ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம்.

மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை 04.03.2011ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (எ)

# நல்லவனாக வாழ்வோம் - பாபா

இசைத்தட்டில் ஊசியை வைத்தால் தான் பாட்டு கேட்கிறது. சரியான அலை வரிசையில் ரேடியோவை வைத்தால் தான் இசை கேட்கிறது. கடவுளிடம் மனத்தை ஒருமுகமாக திருப்பி ஈடுபடுத்தினால்தான் நமக்கு ஆத்மாவின் இனிய இசை கேட்கும். இதைச் செய்வதற்கு மிக எளிய வழி பஜனையாகும். ஒவ்வொருவரும் பஜனை செய்யச் செய்ய இந்த ஈடுபாடு வலுப்படுகிறது.

அதிகாலை மூன்று மணியிலிருந்து ஆறு மணிவரை பிரம்ம முகூர்த்த நேரமாகும்.

நித்திரைக்குப் பிறகு மனமும் கர்மேந்திரியங்களும் அந்த வேளையில் அமைதியாக இருக்கின்றன. அப்போது சத்வகுணம் ஓங்கி இருக்கிறது. இந்த வேளையில் சொல்லும் தியான ஸ்லோகங்களே அதிக பலன்தர முடியும். நம்மிடத்தில்அமைதியும்நம்மைச்சுற்றி அமைதியும் நிறைந்துள்ள அந்த வேளை தான் தியானத்துக்கு மிகவும் ஏற்றது.

நாக்கு கூர்மையான பற்களுக்கு



இடையே கடிபடாமலும் காயம் படாமலும் மிகவும்லாவகமாகச் செயற்படுகிறது. இது போல் தீய சக்திகளும் தீமைகளும் மலிந்த

**யாதவன்**

இவ்வுலகில் நீங்கள் நல்லவர்களாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

**ஜெய் சாய்ராம்**

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## எல்லை தாண்டிய வீரர்கள்

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்றுள்ள சில வீரர்கள், தாய் நாட்டுக்காக விளையாடாமல் வேறு அணிக்காக விளையாடுகின்றனர். எடுத்துக்காட்டாக, அவுஸ்திரேலியாவில் பிறந்தவர்கள் அயர்லாந்து அணியிலும் தென்னாபிரிக்காவில் பிறந்தவர்கள் நெதர்லாந்து அணியிலும் இடம்பெற்றுள்ளனர்.

☆ கனடா அணியிலுள்ள 15 வீரர்களில், ஜோன் டேவிசன் மட்டும் கனடாவில் பிறந்தவர். அணித்தலைவர் ஆஷிஸ் பகாய், ஹர்விர் சிங் பைத்வான், பாலாஜி ராவ், தேசாய், ஹன்ஸ்ரா, ஹிரால் படேல் ஆகிய ஆறு வீரர்கள் இந்தியாவில் பிறந்தவர்கள்.

ரிஸ்வான், சீமா, குர்ராம் ரஷீத், கோகான் இருவரும் பாகிஸ்தானில் பிறந்தவர்கள். டைசன் கோர்டன் (ஜமைய்க்கா), குணசேகரா (இலங்கை), ஹென்ரி ஒசின்டே (உகாண்டா), கார்ல் வாட்சம் (அவுஸ்திரேலியா) உள்ளிட்டோர் பல்வேறு நாடுகளில் பிறந்தவர்கள்.

நிதீஷ்குமார், சர்காரி ஆகிய இருவரும் கனடாவில் பிறந்த போதிலும் இவர்கள் முறையே இந்தியா, ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள்.

☆ நெதர்லாந்து அணியில் இடம் பெற்றுள்ள பார்ரெசி, கெர்வெஜி, குருகர், லூட்ஸ், ஸ்வர்ஸ்சின்கி, டோஸ்சற் உள்ளிட்ட ஆறுபேர் தென்னாபிரிக்காவில் பிறந்தவர்கள்.

☆ அணித்தலைவர் பீற்றர் போரன் நியூசிலாந்தில் பிறந்தவர். அடீல் ராஜா, பூக்கரி இருவரும் பாகிஸ்தானில் பிறந்தவர்கள். டாம் கூபற் அவுஸ்திரேலியாவில் பிறந்தவர்.



☆ அயர்லாந்து அணியிலுள்ள அன்ட்ரூ போத்தா, அல்பேர்ட் வோன் டேர் மேர்வி ஆகிய இருவரும் தென்னாபிரிக்காவில் பிறந்தவர்கள்.

அலெக்ஸ் கசாக், டேவிட் டிரண்ட் ஜோன்ஸ்டன் இருவரும் அவுஸ்திரேலியாவில் பிறந்தவர்கள். ஜோன்ஸ் நியூசிலாந்தில் பிறந்தவர்.

☆ இங்கிலாந்து அணியில் உள்ள அணித்தலைவர் அன்ரூ ஸ்ரொரஸ், கெவின் பீற்றர்சன், மட் பிறிர், திரோட் ஆகிய நான்கு வீரர்களும் தென்னாபிரிக்காவில் பிறந்தவர்கள். மோர்கன் அயர்லாந்தில் பிறந்தவர்.

☆ கென்ய அணியிலுள்ள மிஸ்ரா இந்தியாவில் பிறந்தவர்.

☆ தென்னாபிரிக்க அணியில் இடம் பெற்றுள்ள இம்ரான் தாகிர் பாகிஸ்தானில் பிறந்தவர்.

☆ நியூசிலாந்து அணியில் உள்ள ஸ்கொட் ஸ்ரைரிஸ் அவுஸ்திரேலியாவில் பிறந்தவர்.

☆ இலங்கை (சொந்த நாட்டிலேயே ஒரு பகுதியினருக்கு வாய்ப்பில்லை), இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிம்பாவே, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளில் வேறு நாட்டில் பிறந்தவர்கள் இடம்பெறவில்லை.

## அதிர்ஷ்டம் இருந்தால் வான்கடே போகலாம்

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இம்மைதானத்தில் மொத்தம் 33 ஆயிரம் இருக்கைகள் உள்ளன. இதில் 4 ஆயிரம் ரிக்கெற்றுக்கள் மட்டுமே ரசிகர்களுக்காக விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்நடவடிக்கை ரசிகர்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் ரசிகர்களின் கோபத்தைக் குறைக்க ஆயிரம் ரிக்கெற்றுக்கள் ஒன்



லைன் மூலம் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான திகதியை ஐ.சி.சி. விரைவில் அறிவிக்கும். எனவே அதிர்ஷ்டம் இருப்பவர்கள் ரிக்கெற் பெற்று வான்கடே மைதானத்திற்குச் சென்று இறுதிப் போட்டிகளைப் பார்க்கலாம்.

## எது இராசியான இடம்?


சச்சின் டெண்டுல்கர் போட்டியில் விளையாடும் போது, அவரது மனைவி அஞ்சலி, உட்கார்ந்த இடத்தை விட்டு நகரமாட்டார்.

சமீபத்தில் சச்சின், தான் குடியிருந்த தொடர்மாடி வீட்டிலிருந்து பாண்டரா பகுதியிலுள்ள பங்களாவுக்கு இடம் மாறினார்.

இதனைத் தொடர்ந்து பங்களாதேஷிற்கு எதிராக நடந்த ஆட்டத்தில் டெண்டுல்கர் நீண்டநேரம் நிலைக்கவில்லை.

இதையடுத்து புதிய வீட்டில் எந்த இடத்தில் அமர்ந்தால் ராசியாக இருக்கும் என அஞ்சலி மிகத் தீவிரமாக ஆய்வு செய்து வருகிறாராம்.

## நாக்பூர் விதர்பா கிரிக்கெட் மைதானம்



### மைதானங்கள் ஒரு பார்வை

உலகக் கிண்ணத் தொடரில் மொத்தம் 4 லீக் போட்டிகள் இம்மைதானத்தில் நடைபெறுகின்றன. அத்துடன் நாக்பூர் விதர்பா கிரிக்கெட் மைதானத்தில் 45 ஆயிரம் ரசிகர்கள் அமர்ந்து போட்டியைக் கண்டுகளிக்கலாம்.

## கருத்துக் களம்

### ஹைடன், கில்லி போல் வருமா?



*அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வோட்ஷன்;*

*ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி அணியின் வெற்றிக்கு அடித்தளமிடும் பணி மிகப்பெரிய பொறுப்பு மிக்கது.*

*இதை ஹைடன், கில்கிறிஸ்ட் போன்றவர்கள் மிகச்சிறப்பாகச் செய்தனர். அவர்களது இடத்தை நிரப்புவது கடினம்.*

*ஏனெனில் அவர்கள் எப்போதுமே சிறப்பாக விளையாடினார்கள். நானும் இப்போது அணியில் அவர்களைப் போல் கடினமான பொறுப்பில் உள்ளேன்.*

*இந்தப் பொறுப்பை ஏற்பது கடினமாகவுள்ளது என அவுஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் வோட்ஷன் தெரிவித்தார்.*

### ஜெயித்த பின்னர்தான் நிம்மதி



*இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரொரஸ்;*

*நாங்கள் எப்படி வெற்றி பெற்றோம் என்பது முக்கியமல்ல. வெற்றி பெற்றோம் என்பதுதான் முக்கியம். இருப்பினும் கடைசியில் வெற்றி கிடைத்த பின்னர்தான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது.*


*நல்ல ஆரம்பம் கொடுத்த பின்னர் கடைசி 10 ஓவர் பதற்றத்தை ஏற்படுத்திவிட்டது. ஆடுகளம் நல்ல முறையில் இருந்ததால் வெற்றி பெறமுடியும் என நம்பிக்கை இருந்தாலும் நெதர்லாந்து வீரர்கள் சிறப்பான நெருக்கடியைக் கொடுத்தார்கள்.*

*கடைசி ஆட்டத்தில் டோஸ்சற் அசத்தினார். இப்படியெல்லாம் விளையாடினால் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இந்திய அணியுடனான போட்டியில் சேவாக் மற்றும் அவரது நண்பர்களை எதிர்கொள்வது கடினம்.*

*இந்த ஆட்டத்தை பார்த்த இந்திய அணி உண்மையிலேயே எங்களை மிக எளிதாக எதிர்கொள்ளும்.*

*எனவே வீரர்கள் பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும் என ஸ்ரொரஸ் மேலும் தெரிவித்தார்.*

### தோல்வியடைந்ததால் ஏமாற்றம்



*நெதர்லாந்து வீரர் டோஸ்சற்;*

*உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நல்லதொரு ஆரம்பம்தான். துடுப்பாட்டம் செய்வதற்கு ஆடுகளம் உதவியாக இருந்தது. எங்களுக்குச் சாதகமாகத் தான் அனைத்தும் நடந்தன. கடந்த 2 வார காலமாகக் கடினமாக உழைத்ததற்குப் பலன் கிடைத்திருக்கிறது.*

*ஆனால் கடைசிக் கட்டத்தில் வெற்றி பெறமுடியாமல் தோல்வியடைந்தது மிகப்பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது.*

*நாங்கள் நல்ல முறையில் பந்து வீசினோம். ஆனால் தோல்வியடைந்துவிட்டோம். இது ஏமாற்றம்தான் என நெதர்லாந்து வீரர் டோஸ்சற் தெரிவித்தார்.*

### பொறுப்புடன் விளையாடுங்கள்



*இந்திய அணியின் முன்னாள் வீரர் ரவிசாஸ்திரி;*

*இங்கிலாந்துக்கு எதிரான போட்டி இந்திய அணிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் காலிறுதி வாய்ப்பு உறுதியாகிவிடும்.*

*தோனி தலைமையிலான இந்திய அணி, எந்த அணியையும் எளிதாக வீழ்த்தும் திறமை கொண்டது. இதனால் உலகக் கிண்ணம் வெல்ல அதிக வாய்ப்புள்ளது. சொந்த மண்ணில் விளையாடுவது கூடுதல் சாதகமாக உள்ள நிலையில், ஒவ்வொரு வீரரும் பொறுப்பை உணர்ந்து விளையாட வேண்டும்.*


*மற்றவைகளை ரசிகர்கள் பார்த்துக் கொள்வார்கள் பங்களாதேஷிற்கு எதிரான வெற்றி மன ரீதியாக இந்திய வீரர்களை வலுப்படுத்தி உள்ளது. என இந்திய அணியின் முன்னாள் வீரர் ரவிசாஸ்திரி தெரிவித்தார்.*

# அப்ரிடி சுழலில் சுருண்டது கென்யா; பாகிஸ்தான் அணி அபார வெற்றி

(அம்பாந்தோட்டை)

உமர் அக்மல்-சகிட் அப்ரிடியின் அபார ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி 205 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மீண்டும் சொதப்பிய கென்யா அணிக்கு சோகம் தான் மிச்சம். 10 ஆவது உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கை, இந்தியா, பங்களா தேஷ் ஆகிய நாடுகளில் நடை பெற்று வருகிறது.



இத் தொடரின் 6ஆவது லீக் போட்டி அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடை பெற்றது.

இப் போட்டியில் பாகிஸ்தான்-கென்யா அணிகள் மோதின. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் சகிட் அப்ரிடி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஷேசாட், ஹபீஸ் ஜோடி கென்யாவின் ஓடாயோ, ஓடியனோவின் கூட்டணியின் பந்துவீச்சில் ஓட்டம் சேர்க்க திணறினர்.

இதில் மொகமெட் ஹபீர் 20 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 09 ஓட்டங்களுடனும் அகமெட் ஷேசாட் 18 பந்துகளில் ஒரு ஓட்டத்தையும் எடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த கம்ரன் அக்மல் யூனிஸ்கான் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கினர். பாகிஸ்தான் அணி முதல் 9 ஓவர்கள் நிறைவில் 24 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

எனினும் கம்ரன் அக்மல், அனுபவ யூனிஸ்கான் ஓட் எண்ணிக்கையை சீராக உயர்த்த பாகிஸ்தான் அணி 22.4 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட் டியது.

இதில் 62 பந்துகளில் அரைச்சதம் கடந்த கம்ரன் அக்மல் 67 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 55 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய மிஸ்பா உல் ஹக் பொறுப்புடன் துடுப்பெடுத்தாட மறுமுனையில் யூனிஸ்கான் 66 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

எனினும் யூனிஸ்கான் 67 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 50 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 33.4 ஓவர்களில் 155 ஓட்டங்களை எடுத்து 4ஆவது விக்கெட்டையிழந்தது.


தொடர்ந்து மிஸ்பா உல்ஹக்குடன் இளம் உமர் அக்மல் இணைய அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

இதில் மிஸ்பா உல்ஹக் 58 பந்துகளில் அரைச்சதத்தைப் பெற்றார். மறுமுனையில் உமர் அக்மலும் 40 பந்துகளில் வேகமாக அரைச்சதத்தை பூர்த்திசெய்ய பாகிஸ்தான் அணி 45.1 ஓவர்களில் 250 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடி 115 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது மிஸ்பா உல்ஹக் 69 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 69 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அப்ரிடி களமிறங்க மறு முனையில் ஓடியனோ ஓவரில் ஹட்ரிக் பவுண்டரி உட்பட 4 பவுண்டரிகள் விளாசினார். பவுண்டரி மழையாக பொழிந்த உமர் அக்மல் 52 பந்துகளில் (8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 71 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ரஷாக் களமிறங்க மறு முனையில் அதிகம் எதிர்பார்க்கப் பட்ட அணித்தலைவர் சகிப் அப்ரிடி



07 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை யிழந்து 317 ஓட்டங்களை குவித்தது.

இதில் அப்துல் ரஷாக் 08, அப்துல் ஜீமன் 05 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். கென்யா அணி உதிரிகளாக 46 ஓட்டங்களை வாரிவழங்கியது.

பந்துவீச்சில் ஓடோயே 3 விக்கெட்டுக்களையும் ஓடியனோ, என் கோசி, அணித்தலைவர் கமண்டி, ரிகோலோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 318 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை விரட்டிய கென்யா அணிக்கு ஓயுமா-வோட்டர்ஸ் ஜோடி சுமாரான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் வோட்டர்ஸ் 31 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 17 ஓட்டங்களையும் ஓயுமா 37 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 16 ஓட்டங்களையும் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழக்க கென்ய அணி 12.2 ஓவர்களில் 43 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ஓடியா, ரிகோலோ ஜோடி இலக்கை நோக்கி வெற்றிபெறுவதைவிட விக்கெட்டைக்காக்கும் வகையில் தற்காப்பு ஆட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் துடுப்பாட்டத்தில் ஏமாற்றிய அணித்தலைவர் சகிட் அப்ரிடி பந்துவீச்சில் கைகொடுத்தார்.

அப்ரிடியின் துல்லியமான சுழலில் ரிகோலோ 13 ஓட்டங்கள், மிஸ்ர 07 ஓட்டங்கள், அணித்தலைவர் கமண்டே 02 ஓட்டங்களுடன் சிக்கினர்.

மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ஒபுயா 58 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 47 ஓட்டங்களை எடுத்த போது அரைச்சதம் பெறும் வாய்ப்பை அப்ரிடி பறித்தார்.

பின் வரிசையில் ராகேப்பட்டேல், ஓடாயோ, நெகமையா என நான்கு வீரர்களும் பூச்சியத்துடன் வெளியேற கென்ய அணி 33.1 ஓவர்களில் 112 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் கென்யா அணி 33.1 ஓவர்களில் 112 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் 205 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் தொடரில் 2 புள்ளிகளைப் பதிவு செய்தது.

பந்துவீச்சில் அணித்தலைவர் சகீப் அப்ரிடி 8 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர் உட்பட 16 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் சாய்த்தார்.

இதன் மூலம் சர்வதேச அரங்கில் நான்காவது முறையாக 5 விக் கெட்டுக்கள் வீழ்த்திய பெருமை பெற்றார்.

இப் போட்டியில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு துடுப்பாட்டத்தில் ஜொலித்த உமர் அக்மல் ஆட்ட நாயகன் விருது வென்றார்.

**அதிக உதிரிகள்**

பாகிஸ்தான் அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் கென்யா அணி 46 உதிரி ஓட்டங்களை வாரி வழங்கி சர்வதேச அளவில் 4 ஆவது இடத்தைப் பெற்றது.

முதல்மூன்று இடங்களில்ஸ்கொட்லாந்து (59 ஓட்டங்கள்), இந்தியா (51 ஓட்டங்கள்), பாகிஸ்தான் (47 ஓட்டங்கள்) ஆகிய அணிகள் உள்ளன.

## இடது கையில் சச்சின் பயிற்சி

(பெங்களூர்)

இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் இடது கையில் துடுப்பாட்ட பயிற்சி எடுத்தது எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்திய துணைக்கண்டத்தில்நடக்கிறது. இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா உள்ளிட்ட 14 அணிகள் பங்கேற்றுள்ளன. பி பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய அணி தனது முதல் போட்டியில் பங்களாதேஷை வீழ்த்தி இருந்தது.

இரண்டாவது போட்டியில் எதிர் வரும் 27ஆம் திகதி இங்கிலாந்தை சந்திக்கிறது.

இதற்காக இந்திய வீரர்கள் பெங்



களூர் சின்னச்சாமி மைதா னத்தில் கடந்த இரண்டு நாட்களாக தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின் றனர்.

நேற்றுமுன்தினம் நடத்த மூன்று மணிநேரத்திற்கும் அதிகமான பயிற்சியில் துடுப்பாட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர்.

**இடது கைபயிற்சி**

முழங்காலில் ஏற்பட்ட வலி காரணமாக முதல் நாளில் லேசான பயிற்சியில் ஈடுபட்ட சச்சின் நேற்று கிளவுஸ் அணியாமல் இடது கையில் சிறப்பான முறையில் பந்தை எதிர்கொண்டு துடுப்பாட்ட பயிற்சி செய்தார்.

இவருக்கு சில இந்தியா உள்ளூர் பயிற்றுவிப்பாளர்கள் பந்து வீச்சு செய்தனர். சச்சினின் இந்த முயற்சி எல்லோருக்கும் வித்தியாசமாக இருந்தது.

## நாளைய ஆட்டம்

**அவுஸ்திரேலியா எதிர் நியூசிலாந்து**

நேரம்:-மு.ப. 9.30 மணி

மைதானம்:- நாக்பூர்

**பங்களாதேஷ் எதிர் அயர்லாந்து**

நேரம்:-பி.ப. 2.30 மணி

மைதானம்:- மிர்பூர்

## மறக்காதீர்கள்!

**இலங்கை எதிர் பாகிஸ்தான்**

நேரம்:- நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 2.30 மணி

மைதானம்:- கொழும்பு

# அடக்கித்தான் தேசிய நல்லிணக்கத்தினை ஏற்படுத்தப் போகின்றார்களா?

## சிவாஜிலிங்கம் கேள்வி

(யாழ்ப்பாணம்)

அடக்கித்தான் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போகிறார்களா என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் சிதைக்கு நேற்று முன்தினம் மாலை வைக்கப்பட்ட தீ முற்றாக இரவு 10.00 மணியளவில் அணைந்தபின்னர் அங்கிருந்தவர்கள் கலைந்துசென்றனர்.

இந்நிலையில் நள்ளிரவுக்கும் நேற்றுக் காலைக்கும் இடையில் வாகனம் ஒன்றில் சென்ற இனந்தெரியாதோரால் பார்வதி அம்மாளின் அஸ்தி நாசமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பார்வதி அம்மாளின் இறுதிக் காலத்தில் அவரின் நலன்களில் கரிசனையுடன் செயற்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் குறித்து அவர் தெரிவித்ததாவது,

நேற்றுக் காலை அங்கு சென்றபோது பார்வதி அம்மாளின் அஸ்தி சிதைக்கப்பட்டு தாறுமாறாக வீசப்பட்டிருந்ததுடன், பெருமளவிலான அஸ்தி கடலிலும் வீசப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இவ்வாறு செய்தபின்னர் பார்வதி அம்மாள் அக்கினியுடன் சங்கமான இடத்தில் மூன்று நாய்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டுக் கிடந்தன. அதன் பின் இந்நாய்களின் சடலங்கள் புதைக்கப்பட்டு தாறுமாறாக வீசப்பட்ட பார்வதி அம்மாளின் அஸ்தி அந்த இடத்திலேயே ஓரளவு சேர்க்கப்பட்டிருக்கிறது. இன்று காலை அஸ்தி கரைக்கும் நிகழ்வு இடம்பெறுகிறது. அதனைத் தொடர்ந்து எஞ்சியுள்ள ஒரு சில எலும்புகளும் சேகரித்து வைக்கப்பட்டு ஒரு மாதத்தின் பின் அந்தியேட்டிக் கிரியைகள் இடம்பெறவுள்ளன.

துப்பாக்கி வைத்திருப்பவர்கள் நாய்களைச் சுட்டிருக்கிறார்கள். இதிலிருந்து இந்தச் சம்பவத்தின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். இச் சம்பவத்தின் பின்னால் இருப்பவர்களை மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

இவ்வாறுதான் ஒரு இனத்தை அவமதித்து, அடக்கித்தான் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என அவர்கள் நினைத்தால் அதற்கு தமிழ்த் தேசிய இனம் ஒரு பதிலைக் கூறவேண்டிய காலம் வரும் என்றார். (எ-1)

## மரண அறிவித்தல்கள்

### நவரத்தினம் ஸ்ரீபரன் (சின்னண்ணை)

(சாரங்கன் லொறி உரிமையாளர்)

சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் ஸ்ரீபரன் நேற்று 23.02.2011 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(3872)

### தர்மலிங்கம் வியஜஸ்ரீ



மயிலணி வடக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் முனியப்பர் வீதி, கோண்டாவில் மேற்கு, நந்தாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் வியஜஸ்ரீ நேற்று 23.02.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் தர்மலிங்கம் லோகேஸ்வரியின் அன்பு மகனும் ஜெயந்தியின் அன்புக் கணவரும் வினேசன், ஜெனேசன், அனோஜன், கம்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீவாசன் (பனை அபிவிருத்திச் சபை), ஸ்ரீதாசன் (லண்டன்), ஸ்ரீஜெகன் (சுவிஸ்), ஸ்ரீபிரகாஸ் (ஆசிரியர், ஊர்காவற்துறை சென் அன்ரனீஸ்), உஷா, அனுசியா (சுவிஸ்), ஸ்ரீலேக்கா (ஆசிரியை, மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயம்) ஆகியோரின் சகோதரரும், ராமு மற்றும் காலஞ்சென்ற தனலட்சுமி தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 24.02.2011 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முனியப்பர் கோவில் வீதி,
கோண்டாவில் மேற்கு, நந்தாவில்.
0214915408

தகவல்:
குடும்பத்தினர்

(3874)

## பார்வதி அம்மா...

சங்கமமானது. இதனையடுத்து அன்றிரவு 7.00 மணியளவில் மயானத்தில் கூடியிருந்த மக்கள் அனைவரும் கலைந்துசென்றனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை ஊறணி மயானத்திற்குச் சென்று பார்த்தவேளை அவரது பூதவுடல் தகனம் செய்யப்பட்ட விடத்திலிருந்து அஸ்தி அள்ளி தாறுமாறாக வீசப்பட்டிருந்ததை அவரது உறனர்கள் கண்டுள்ளனர்.

அத்துடன் மூன்று நாய்கள் சுட்டுக் கொல்லப்பட்டு அரைகுறையாக எரிக்கப்பட்ட நிலையில் அவரது அஸ்தியுடன் போடப்பட்டும் இருந்தது.

இவ்வாறான மனிதாபிமானமற்ற செயல் குறித்து பலரும் தமது கண்டனங்களை தெரிவித்துள்ளனர். (எ-1)

## தமிழ்க் கூட்ட...

35 காணிகளை கடற்படையினரும் பயன்படுத்துகின்றனர்.

இது தவிர குறித்த பகுதியில் உள்ள இரண்டு பாரிய நெல் ஆலைகளையும் தரைப்படையினர் பயன்படுத்தி வருகின்றனர். தரைப்படையினரின் பயன்பாட்டிலிருந்த 470 காணிகளை பொதுமக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எஞ்சியவற்றை விரைவில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வட பகுதி மக்களின் வாழ்க்கையை உறுதிசெய்வது அரசாங்கத்திக் கடமை எனவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-5)

## இந்திய, இலங்கை கூட்டுச்...

இலங்கைக்கும் இடையிலான கடலில் ஜனவரிமாதம் இந்திய மீனவர்கள் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் 136 மீனவர்கள் இம்மாத முற்பகுதியில் இலங்கை மீனவர்களால் சுற்றிவளைக்கப்பட்டு இலங்கைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் முதலாவது மீனவர் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது. இரண்டாவது மீனவர் கடலில் கழுத்து நெரிக்கப்பட்டு இறந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இச் சம்பவங்கள் இலங்கை கடற்பரப்பிலேயே இடம்பெறுவதாக அமைச்சர் கிருஷ்ணா சுட்டிக் காட்டினார்.

இது எமது மீனவர்களுக்கு எதிராக பலவந்தத்தைப் பிரயோகிப்பதை நியாயப்படுத்த மாட்டாது. எனினும் நீண்டகாலத்தின் பின்னர் அப்பகுதியில் மீன்பிடியை ஆரம்பித்துள்ள இலங்கை மீனவர்கள் குறித்தும் நாம் கரிசனை கொள்ள வேண்டும்.

துப்பாக்கிப் பிரயோகம் வன்முறைகளைப் பயன்படுத்துதல் என்பவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது. இதுகுறித்து இலங்கை அரசாங்கத்திடம் எமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளோம். இச்சம்பவங்கள் குறித்து தீவிரமாக விசாரணை நடத்துமாறும் மீண்டும் அவை நடைபெறாமலிருப்பதை உறுதிப் படுத்துமாறும் நாம் ஏற்கெனவே இலங்கை அரசாங்கத்தை கோரியுள்ளோம் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா கூறியுள்ளார். (ச-5)

## காட்டுமிராண்டித்...

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் வேலுப்பிள்ளை பார்வதி அம்மாளின் பூதவுடல் தகனம் செய்த இடத்தில் விசமிகளால் மூன்று நாய்கள் சுட்டுக் கொலை செய்துவிட்டு போடப்பட்டுள்ளது.

இச் செயலானது காட்டுமிராண்டித்தனம். யாருடைய வரலாற்றிலும் இவ்வாறான மிக மோசமான செயல் இடம்பெறவில்லை.

இறந்த பின்னர் எல்லாளனை அவருடைய சமாதிக்கு சென்று துட்டகைமுனு நீண்டகாலமாக மரியாதை செலுத்திவந்தமை வரலாறாகும்.

இவ்வாறான செயல்கள் மக்கள் மத்தியில் விரக்தியையும் அச்சத்தையும் ஏற்படுத்துவதுடன் ஆரோக்கியமான சூழ்நிலை இல்லை என்பதை கோடிட்டுக் காட்டுகின்றது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ச-5)

## உழவு இயந்...

திரங்கள் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கும் கைமாற்றப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இன்னும் 100 உழவு இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்காமல் தென்பகுதிக்கு அனுப்பத் தயாராகவுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள விவசாய நிறுவனங்களுக்கு 38 உழவு இயந்திரங்களை மாத்திரம் கையளித்துள்ளதுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சில நிறுவனங்களுக்கும் மேலும் 38 உழவு இயந்திரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. மிகுதியாகவுள்ள 124 உழவு இயந்திரங்கள் தொடர்பில் அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

யுத்தத்தால் சுமார் 10ஆயிரம் உழவு இயந்திரங்கள் அழிக்கப்பட்டமையால் சாதாரண விவசாயிகள் நன்மையடையும் விதமாக அயல் நாடு நட்பு ரீதியாக வழங்கிய நன்கொடை க்கு அரசாங்கம் ஏன் இவ்வாறு செய்ய வேண்டும்? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினார். (ச-5)

## ஐ.நா நாடாளுமன்றக்...

உறுப்பினர்களின் அரசியல் குழுவினர் நேற்று யாழ். அரச அதிபரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் பொதுமக்களுக்கான உதவிகள் சென்றடையும் விதம் அவர்களுக்கு தேவையான உதவிகள் சென்றடைகின்றனவா? இவ் உதவிகள் மூலம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் நன்மையடைகின்றனரா என்பது குறித்து அவர்கள் யாழ். அரச அதிபரிடம் கேட்டறிந்துகொண்டனர்.

இதைவிட உள்ளூராட்சித் தேர்தல், இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் என்பன குறித்தும் அவர்கள் கேட்டறிந்து கொண்டதாக அரச அதிபர் தெரிவித்தார். (ச-5)

## பான் கீ மூனுடன்...

தொடர்புகொள்ள விருப்பம் என்றால் நேரடியாகவோ அல்லது அரசினூடாகவோ தொடர்பு கொள்ள முடியும் என நியோமல் பெரேரா மேலும் தெரிவித்தார். (ச-5)

## பயங்கரவாதப்...

இலக்க ஒழுங்குபடுத்தற்சபையின் விதிகளின் ஐரோப்பிய ஒன்றிய பயங்கரவாதப் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

புதிய பட்டியலில் குறித்த அறிவிப்பு ஜனவரி 31 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. இப் பட்டியலில் தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட 26 அமைப்புக்கள் இடம்பெற்றுள்ளன. (எ-1)


### விற்பனைக்கு

**Laptop**
Intel Core 2 Duo 2.20GHz
2GB RAM,320 GB HDD, DVD R/W, 2MBWeb Cam, Mic
1 Year Warrenty
**Rs. 64,000/=**
Slim External DVD Writer **Rs.6,250/=**
**Contact :071 4938510, 077 1350476**
(3873)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24 .02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.